Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-–12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-05 21-09-2004 செவ்வாய்க்கிழமை ஓசை -21



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10149) T.P: 024-222 4247

# சமாதானப் பேச்சுக்களில் ஏற்படும் இழுத்தடிப்பால் தமிழர் பெரும் இன்னல்களைச் சந்திக்கின்றனர்!

## கனேடியத் தூதுவரிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

**சமாதானப் பேச்சு வார்த்தைகள் இழுத்தடிப்புச் செய்யப்படுவதால் தமிழ் மக்கள் சந்தித்து வரும் இன்னல்களை கனேடியத் தூதுவரிடம் எடுத்துக் கூறியிருக்கின்றோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

*நேற்று கனேடியத் தூதுவருடனான சந்திப்பின் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்;

*கனேடியத் தூதுவருடனான சந்திப்பின் போது எவ்வகையான விடயங்கள் பற்றிப் பேசப்பட்டன?

*நாங்கள் கனேடியத் தூதுவரைச் சந்தித்து எமது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். சமாதானப் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்படுவதால் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமையை அவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கின்றோம். அதனோடு சமாதானப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## அமெரிக்க தூதரக அதிகாரிகள் யாழ்.இல் படையினருடன் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் அரசியல் ஆலோசகரும், பிரஜாஉரிமை தொடர்பான பொறுப்பதிகாரியுமான மார்க் எச்.வில்லியம் தலைமையிலான அதிகாரிகள் குழு ஒன்று நேற்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளது.

இருநாள் விஜயமாக யாழ்.வந்த இவர்கள் பலாலி படைத்தளத்தில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உட்பட்ட தளபதிகளைச் சந்தித்து யாழ்.குடா நாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர்க்கான அமெரிக்காவின் இராணுவ உதவிகள் குறித்தும் பல்வேறு பணிகளுக்காகவும் யாழ்.குடாநாட்டில் தங்கியிருக்கும் அமெரிக்க பிரஜைகளின் பாதுகாப்பு த் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

இதைவிட குடாநாட்டின் சிவில் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டர் அமைப்புக்கள் போன்றோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (33)

# பேச்சுக்கள் நடைபெறாததையிட்டு கனடா அரசு மிகுந்த கவலை

## கனேடியத் தூதுவர் தெரிவிப்பு

அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் நானும் மிகவும் ஆக்க பூர்வமான கலந்தாலோசனையை மேற்கொண்டுள்ளோம் என சிறிலங்காவுக்கான கனேடியர் தூதுவர் கூறியுள்ளார்.

கனடா அரசு சார்பாக சமாதான முயற்சிகளுக்கு தமது பலமான ஆதரவு தொடர்ந்து இருக்கும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும். கிட்டத்தட்ட 18 மாதங்களாக எந்தவொரு சமாதானப் பேச்சுக்களும் இடம் பெறவில்லை என்பதனால் கனடா அரசு மிகுந்த கவலை அடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். சமாதானப் பேச்சுக்களில் தளர்வை போக்கி இயன்றளவு மிகவிரைவாக பேச்சு வார்த்தை மேசைக்கு திரும்புமாறு தான் மீண்டும் தமிழ்ச்செல்வனையும், விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளதாகவும் தனது பேட்டி யில் குறிப்பிட்டார். சீரழிந்துள்ள பாதுகாப்பு நிலைமைகளாலும்தொடர்கின்ற அரசியற் படுகொலைகள் தொடர்பாகவும் சமாதான முயற்சிகளில் ஸ்திர



(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானச்செயற்பாடுகளுக்கான பொறுப்பை ஜே.வி.பி.யே ஏற்றுக்கொள்ள வேண்டும்

## சிறில.எதிர்க்கட்சித்தலைவர் ரணில்

(கொழும்பு)

சமாதானச் செயற்பாடுகளுக்கான முழுப் பொறுப்பையும் சனாதிபதியின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ள மக்கள் விடுதலை முன்னணியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே ரணில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறும் போது; சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஏனைய கட்சிகளிடம் ஆதரவு கோரிய அதே வேளை அரசாங்கத்தின் முக்கிய கட்சியான மக்கள் விடுதலை முன்னணி அந்தக் கட்சிகளுக்கு சேறு பூசி வருவதாகவும் கூறினார்.

டோக்கியோ பிரகடனத்தில் அடிப்படையில் ஒஸ்லோவில் செய்துகொள்ளப்பட்ட உடன் படிக்கையின் படி இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முன்வைக்கப்படும் யோசனைகளுக்கு ஐக்கிய தேசிய கட்சி முழுமையான ஆதரவு வழங்குமெனவும் அவர் மேலும் கூறினார்.

சமாதானச் செயற்பாடுகளுக்கு எதிரான மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடானது சனாதிபதிக்கெதிரான செயற்பாடாகும் என்பதை தெளிவாக புரிந்து கொள்ள முடியும் மெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஜப்பானியத் தூதரக அதிகாரிகள் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்

இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகத்தின் அதிகாரிகள் குழு ஒன்று நேற்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளது. ஜப்பானியத் தூதரகத்தின் தொழில்நுட்ப மற்றும் அபிவிருத்தி உதவித்திட்டங்களுக்கான அதிகாரி ஸந்தனே தெனக்குறே தலைமையில் யாழ். வந்த இக்குழுவினர்

யாழ்.குடாநாட்டின் கல்வி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான ஜப்பானின் உதவித்திட்டங்கள் மற்றும் அதற்கான பிரதேசதெரிவுகள் என்பன குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவில் அமைப்புகள் தொழில்நுட்பம் கல்வி துறைசார் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியுள்ளனர். (33)

## உரத்தின் விலை 250ரூபா அதிகரிக்கும்


(கொழும்பு)

விவசாய உள்ளீடான உரத்தின் விலை இருநூற்றிஐம்பது ரூபாவால் அதிகரிக்கப்படலாமென விவசாய அமைச்சர் கூறியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

நான் ஆத்மரீதியாக உணர்கிறேன்.
இன்றில்லாவிட்டாலும்
என்றோ ஒருநாள் எமது மக்கள்
நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

தியாகி லெப்.கேணல் திலீபன்




# தியாகி திலீபன் உருவப்படந்தாங்கிய ஊர்தி முல்லை மாவட்டத்தில் பவனி

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முல்லை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களால் வடிவமைக்கப்பட்ட தியாகி திலீபனின் உருவப்படத்தைத் தாங்கிய ஊர்தி நேற்றுப் பகல் புதுக்குடியிருப்பு மாவீரர் அஞ்சலி மண்டபத்திலிருந்து மக்களின் தரிசிப்புக்காக பவனி புறப்பட்டது. இவ்வூர்தி முள்ளிவாய்க்கால் செல்வபுரம் ஊடாக முல்லை நகர் சென்று பின்னர் சிலாவத்தை ஊடாக அளம்பில்,செம்மலை சென்று குமுழமுனை முறிப்பு ஊடாக முள்ளியவளை சென்று முள்ளியவளைப் பிரதேசத்தில் தரிசிப்பு முடிந்தபின்னர் ஒட்டிசுட்டான் ஊடாக மாங்குளம் பிரதேசங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### நிரந்தர நியமனம் கோரி

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் போராட்டம் நடத்தத் தீர்மானம்

நிரந்தர நியமனம் கோரி வடக்கு கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கம் அரசிற்கெதிராக பாரிய போராட்டம் ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சங்கத்தின் வடமாகாணக் கிளையின் கூட்டத்தில் அத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடமாகாணத்தில் 5 மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் எழுபதிற்கும் மேற்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தம் பதிவுகளை மீளாய்வு செய்யாத கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தற்போது பணியிலிருக்கும் அனைத்துப் பகுதி நேர ஆங்கில ஆசிரியருக்குமான விசேட கூட்டம் நாளை புதன் கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் சம்பந்தப்பட்ட சகலரையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் எஸ்.ஞானகரன் கேட்டுக் கொண்டுள்ளார்



புதுக்குடியிருப்பில் பல இலட்சம் ரூபாய்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் விளையாட்டு மைதானமும், அதனுடன் இணைந்த பிரதேச சபைக் கட்டடத்தையும் படத்தில் காணலாம். இப்பகுதியில் மேலும் பல கட்டட வேலைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்: தவரட்ணம்)

### - பூநகரி உலக உணவுத்திட்டத்தின் கீழ்

## வேலைக்கான உணவுப் பொருட்கள் சில மாதங்களாக வழங்கவில்லை

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பூநகரிப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான உணவுப் பொருட்கள் கடந்த சில மாதங்களுக்குரியவை கிடைக்கவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பூநகரிப் பிரதேசத்ததின் சகல இடங்களிலும் உலக உணவுத்திட்ட 2004 ஆம் ஆண்டுக்குரிய வேலைகள நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்தசில மாதங்களுக்குரிய வேலைக்கான உணவுப் பொருட்களே வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.(34)

## கால்நடைகளை கட்டி பராமரிக்கக் கோரிக்கை

முள்ளியவளை முல்லைத்தீவு பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும கால்நடைகளை காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ளதால் கட்டிப் பராமரிக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முள்ளியவளை இணைப்பாளர் செல்வன் றொபேட் கேட்டுக்கொண்டுள்ளார்.

கால்நடைகளை கட்டிப் பராமரிக்கத் தவறும் பட்சத்தில் பிடித்துக் கட்டப்பட்டு குற்றப்பணம் அறவிடப்படும் என்பதுடன் பயிரழிவு ஏற்படுமிடத்து அதற்கான குற்றப்பணமும அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (20)

### - வடக்கு கிழக்கு மாகாண -

## கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 16 நூல்கள் பரிசுக்காகத் தேர்வு

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2003ஆம் ஆண்டுக்குரிய தமிழ் இலக்கிய நூல் பரிசுக்கான தேர்வின் முடிவுகளை வெளியிட்டுள்ளன.

16 நூல்கள் இம்முறை பரிசுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கான பரிசுகள் அவற்றின் படைப்பாளிகளுக்கு எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் மாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் வழங்கப்படும். பரிசுபெறும் நூல்களின் விபரம் வருமாறு:-

கவிதை:- 'இருத்தலுக்கான அழைப்பு'- முல்லை மஸ்ரிபா (முஸ்தபா மு.ஃ.ஸீர்), 'தென்னிலங்கைக் கவிதைகள்' (மொழிபெயர்ப்பு) சோ.பத்மநாதன்.

சிறுகதை:- ஒப்பனை நிழல்- வி.கௌரிபாலன்

நாவல்:- 'புயல் பறவை'-மலரவன், 'வீதியெல்லாம் தோரணங்கள்'-தாமரைச்செல்வி.

சிறுவர் இலக்கியம்:- 'வெள்ளைக குதிரை' -ஓ.கே.குணநாதன்.

பல்துறை:- 'பனையியல்'-முருகேசு பாக்கியநாதன், 'மொஸ்கோ அனுபவங்கள்'-ஆரையம்பதி க.செபரத்தினம், 'ஈழத்து மாண்புறு மகளிர்'- பத்மா சோமகாந்தன், 'கொட்டியாரப்பற்று வரலாறு' எம்.ஏ.சமசு.

உயர்கல்வி:- 'அழகியற்கல்வி'- பேராசிரியர் சபா ஜெயராசா, 'சூழல புவியியல்'-என்.அன்ரன் நோபேட்.

நாடகம்:- 'நெஞ்சுறுத்தும் கானல்'- தே.தேவானந், 'பண்டாரவன்னியன் குருவிச்சி நாச்சியார்'-அருணா செல்லத்துரை.

ஆய்வு:- 'மருதத்திணை'-வாசுகி நடேசன், 'ஈழத்தமிழ் அரங்கில் பெண்'- ஜெயரஞ்சினி ஞானதாஸ். (25)

### அவசர கலந்துரையாடல்

முல்லை வலய பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து புகுமுக மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லை வலய பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுக்கொள்ளுகின்றனர். (08,20)

## வடக்கு கிழக்கு பாடசாலைகளுக்கிடையேயான தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்மொழித் தினப்போட்டிகளின் மாகாணமட்ட முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன. இம்முடிவுகளின்படி முதலாவது இடத்தைப்பெற்ற மாணவர்களே அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியில் பங்கு பற்றும்தகுதியைப் பெற்றுள்ளார்கள். இவ்வாண்டு அகில இலங்கை தமிழ் மொழித்தினப்போட்டி கொழும்புக்கு வெளியே பெரும்பாலும் வவுனியாவில் நடத்தப்படக்கூடிய சாத்தியமிருப்பதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு கிழக்கு மாகாணமட்டப் போட்டி முடிவுகளின் முதலாவது இடத்தைப் பெற்ற மாணவரின் பெயர் மற்றும் பாடசாலை விபரம் வருமாறு;

முதலாம் பிரிவு-வாசிப்பு. த.கோகுலன், கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம். இரண்டாம் பிரிவு-வாசிப்பு பொ.நிருபிதா, வவுனியா விபுலாநந்த ம.வி.

ஆக்கத்திறன் வெளிப்பாடு- யு.என்.மினித்பாரத், கல்முனை இராமகிருஷ்ணன் வித்.

ஆக்கம் (எழுத்து) முதலாவது பிரிவு த.அபிநயா, சாவகச்சேரி ஆரம்பப்பாடசாலை இரண்டாம் பிரிவு-கட்டுரை கடிதம் வரைதல எஸ்.இஸ்ஸத் சமிஹா, கல்முனை ஆயிஷா பெண்கள் ம.வி, பிரிவு-3 கட்டுரை/கடிதம் வரைதல் பா.ஜசிந்தா, யா/வேம்படி மகளிர் கல்லூரி.

பிரிவு-4 கட்டுரை/கடிதம் வரைதல், வா.தர்மிஷா, யாழ். யூனியன் கல்லூரி. இலக்கியம் நயத்தல்- 5 ஆம்பிரிவு த.சசிரேகா, மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி, 4ஆம் பிரிவு இலக்கணப்போட்டி ஆ.பாத்திமாறிபானா, மட்டக்களப்பு மீரா பாலிகாவித்., 5ஆம் பிரிவு இலக்கணப்போட்டி:-தி.காயத்திரி யாழ். மகாஜனாக் கல்லூரி, பிரிவு-5 திறனாய்வுப்போட்டி வி.மயூர தாஸ், யா/புற்றளை ம.வி., பிரிவு-4 குறுநாடக ஆக்கம். வே.சுபிதா கிளிநொச்சி கரவெட்டித்திடல் நாகேஸ்வரவித். பிரிவு-5 குறுநாடக ஆக்கம் கு.அறிவழகன் மல்லாகம் ம.வி., பிரிவு-4 கவிதையாக்கம்- அ.அனுஷானி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பிரிவு-5 கவிதையாக்கம் மு.றசீத் ஜுஸ்லா மட்டுநகர் மீரா பாலிகவித்., பிரிவு-4 சிறுகதையாக்கம் மு.கேதுஜா கல்முனை விபுலானந்த ம.க. பிரிவு-5 சிறுகதை ஆக்கம் ரா.அருஸ் கிண்ணியா மத்திய கல்லூரி. பிரிவு-1 பேச்சு கு.சிரஞ்சீதன் வவுனியா விபுலானந்த ம.வி. பிரிவு 2 பேச்சு ஏ.ஜனகன் மட்டுநகர் சிவானந்தா வித்., பிரிவு-3 பேச்சு பி.கேஷினி ஏஞ்சலா திருமலை சென்மேரிஸ் கல்லூரி, பிரிவு-5பேச்சு அபிராமி திருமலை சென்மேரிஸ் கல்லூரி பிரி வு 5தெ.ஹர்சன் யாழ் மத்திய கல்லூரி. பாவோதல் 1ஆம் பிரிவு சூ.கோபிகிருஷ்ணா கிளிநொச்சி, தர்மபுரம் இல.1 அ.த.க.பாடசாலை, பாவோதல் 2ஆம் பிரிவு த.தர்ஷாந்த திருமலை, சென்யொசப் கல்லூரி, பாவோதல் 3ஆம் பிரிவு சதுர்த்திகா சக்கரவர்த்தி மட்டுநகர் வின்சன்ட் மகளிர் கல்லூரி, பாவோதல்-4ஆம் பிரிவு.எஸ்.ஐ.ஸவரதுல் விழினா கல்முனை அல்மஹர் உயர்தர பாடசாலை, பாவோதல் 5ஆம் பிரிவு ச.ஜெயந்திரன் முல்லைத்தீவு, யோகபுரம் மகாவித்தியாலயம், 1ஆம் பிரிவு இசையும் அசையும் குருபரன் நாராணி கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம், இசை தனி -2ஆம் பிரிவு மாதங்கி இணுவில் இந்துக்கல்லூரி, இசை தனி-4ஆம் பிரிவு மா.ஷயுக் ஷினி- திருமலை, சண்முகா இந்து மகளிர் கல்லூரி, இசைதனி-5ஆம் பிரிவு கு.ஜெயதீசன் யாழ்யூனியன் கல்லூரி, இசைதனி-05ஆம்பிரிவு ஜீவிகா விவேகானந்தன் யாழ்.யூனியன் கல்லூரி, இசைக்குழு யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, இசைக்குழு- 2-மட்டுநகர் புனித சிசிலியா பெண்கள் ம.வி., நடனம் தனி-1ஆம் பிரிவு த.சரவண்யா யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, நடனம் தனி- 2 ஆம் பிரிவு யோ.ஹம்சானந்தி வவுனியா இறம்பைக்குளம் ம.ம.வி., நடனம் தனி-3 ஆம் பிரிவு துவாரகா கிருபாகரன் மட்டக்களப்பு, புனித சிசிலியா பெண்கள் ம.வி, நடனம்தனி-4 ஆம்பிரிவு பா.அனுன் யாழ்.பெரியபுலம் நடனம் தனி 5ஆம் பிரிவு ம.வி.யுமைரூபி வவுனியா இறம்பைக்குளம் ம.ம.வி., நடனம் குழு-1 மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி, நாட்டிய நாடகம் குழு-2 யாழ்.இந்துமகளிர் கல்லூரி, நாடகம் திறந்த போட்டி யாழ்.ஸ்கந்தவரோதய கல்லூரி, வில்லுப்பாட்டு திறந்தபோட்டி யாழ்ப்பாணக் கல்லூரி, விவாதம் திறந்தபோட்டி கல்முனை அல்மனார் மத்திய கல்லூரி, தமிழறிவு வினாவிடை திறந்த போட்டி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, முஸ்லிம் நிகழ்ச்சி குழு, கல்முனை ஷம்ஸ் மத்திய கல்லூரி(25)


## அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு முடிவுகள்

மு/அம்பகாமம் அ.த.க.பாடசாலை சிறுவர் விளையாட்டு முற்றம் அமைப்பு நிதிக்காக 18.09.2004 இல் அதிஷ் டம்பார்க்கப்பட்ட அதிரஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெறும் வெற்றியாளர்களுக்கான சீட்டு இலக்கங்கள்.

1ஆம் பரிசு~1987,
2ஆம் பரிசு~806,
3ஆம் பரிசு~2235,
ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்
1~109, 2~914, 3~4992, 4~72, 5~4833, 6~866, 7~30., 8~4955, 9~1887, 10~4659.

பரிசிற்குரியவர்கள் பாட சாலை நேரத்தில் பரிசில்களைகப் பெற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்

(.5114)



மீண்டும் புதுப்பொலிவு பெற்று வரும் கிளிநொச்சி நகரில்

## தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்

டிப்ளோமா பாடநெறிகள் தமிழ் விளக்கங்களுடன்

Diploma in MS Office

Diploma in Desktop Publishing

Diploma in Computer Studies




Diploma in Computer Programming

Diploma in Web Design

Diploma in Computer Programming

அறிமுக கட்டணச் சலுகை
2900/- மட்டுமே
(தவணை முறையிலும் செலுத்தலாம்)

அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்களுகளும் பாடக்குறிப்புகளும் இலவசமாக வழங்கப்படும்.

இப்பாடநெறிகளுக்கான காலம் 4 மாதங்கள்

பாடநெறிகள் யாவும் மூன்றாம் நிலை தொழில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை.

கணினியியல் கல்லூரி - The Computer College
(Affiliated to Asian Computers)
யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி-10404)




## துயர் பகிர்கின்றோம்

### கப்டன் இளங்கோவன்

எமது சபை உத்தியோகத்தர்களான திரு.சுப்பையா கணேசராஜன் திரு.சுப்பையா உதயகுமார் அவர்களின் அன்புச்சகோதரன் சுப்பையா குகநாதன் (நாதன்) கப்டன் இளங்கோவன் அவர்கள் 16.09.2004 அன்று வீரச்சாவடைந்தமையால் துயறுரும் அவர்களின் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்கின்றோம்.

விசேட ஆணையாளர்,
பணியாளர்கள் கரைச்சி பிரதேச சபை,கிளி.
(ஊழியர் நலன்புரிச்சங்கம்)

(சி.10225)



புளோரிடாவில் ஏற்பட்ட ஜவன் சூறாவளியால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிடும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்



ஈராக்கில் தென்பகுதி நகரமான பாஸ்ராவில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள பிரித்தானியப் படைகள்.

## ஜோன்கெரி குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

ஈராக் தொடர்பிலான மதிப்பீட்டில் சனாதிபதி ஜோர்ச் டபிள்யுபுஷ இமாலயத் தோல்வியைச் சந்தித்துள்ளதாக அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் சனநாயக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் ஜோன கெரி குற்றம் சுமத்தியுள்ளார். ஈராக் மீது போர் தொடுக்க எடுத்த முடிவு பயங்கரவாதத்திற்கெதிரான போரை மிகவும் தீவிரமான வழியில் திசை திருப்பி விட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# தகவல் வழித் தடத்தில் கடும் நெருக்கடி

# ‘இணையத்தளம்’ இல்லாமல் போய்விடுமா?

### -நிபுணர்கள் அச்சம்

**தகவல் வழித்தடத்தில் கடும் நெருக்கடி ஏற்பட்டு இருப்பதால் ‘இணையத் தளம்’ இனிமேல் இல்லாமல் போய்விடுமோ? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகல் கணினித் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.**

இணையத்தளம் தகவல் தொடர்பு வசதிகள் பெருகியதைத் தொடர்ந்து கணினி முன் அமர்ந்து இணையத் தளத்தின் உதவியுடன் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் நடக்கும் நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடிகிறது. உலகின் ஒரு மூலையில் இருப்பவர் மற்றொரு மூலையில் இருப்பவர்களுடன் மின் அஞ்சல் மூலம் தொடர்புகொண்டு கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள முடிகிறது.

இதற்கெல்லாம் www (வேர்ல்டு வைடு வெப் சைட்) என்ற முகவரியுடன் தொடங்கும் இணையத் தளம் பயன்படுத்தப்படுகிறது. இந்த இணையத்தள வலை முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய தகவல் பரிமாற்ற தொழில் நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். ஆனால் சமீப காலமாக இணையத்தளத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து விட்டது. பல வர்த்தகங்களும், வர்த்தக தகவல் பரிமாற்றங்களும் இணையத்தளத்தின் மூலமே நடைபெறுகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகள் மட்டுமன்றிப் பல வளரும் நாடுகளும் இணையத் தளத்தை அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டன. மின் அஞ்சல் போக்குவரத்தும் அதிகரித்து விட்டது. மேற்கண்ட காரணங்களால் இணையத்தளத் தகவல் வழித்தடத்தில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவும், வைரஸ் தாக்குதல் காரணமாகவும் www இணையத் தளமே இனிமேல் இல்லாமல் போய்விடும் ஆபத்து ஏற்பட்டு இருப்பதாக அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் நடந்த மாநாட்டில் தேசிய கணினித் துறை நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## இந்தோனேசிய தேர்தலில் ஜெனரல் சுசினோ முன்னணியில்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நடைபெற்றுள்ள அதிபர் பதவிக்கான தேர்தலில் அதிபர் சுகர்னோ புத்திரிக்கான வெற்றிவாய்ப்பு கைநழுவிச் சென்றுகொண்டிருப்பதாக ஆறாம் கட்டத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. சுகர்னோ புத்திரியின் ஆட்சியில் முன்னர் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜனரல் சுசினேகா பாஸ்டாங் முன்னணியிலுள்ளார். கொள்கையைப் பொறுத்த வரையில் இருவருக்குமிடையே வித்தியாசம் இல்லை எனவும் நாட்டில் ஊழலை ஒழிக்கவும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த இருவரும் உறுதியளித்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 35 பாகிஸ்தானியர்களை அமெரிக்கா விடுவித்தது

தீவிரவாதத்திற்கெதிரான போரில், அல்-கைதாவுடன் தொடர்பு வைத்திருந்த தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அமெரிக்கப் படையினரால் ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் கைது செய்யப்பட்ட 35 பாகிஸ்தானியரை அமெரிக்கா விடுவித்துள்ளது. இப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் கியூபாவில் உள்ள குவாண்டனமோ கடற் படைத்தளத்தில் அமெரிக்கா சிறைவைத்திருந்தது. பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களும் அங்கு அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 35 பேரை அமெரிக்கா விடுதலை செய்ததையடுத்து அவர்கள் பாகிஸ்தான் திரும்பினர். அவர்களைப் பாகிஸ்தான் அரசு விசாரணைக்காக ராவால் பிண்டி சிறைக்குக் கொண்டு சென்றது. 4 அல்லது 5 பாகிஸ்தானியர்கள் இன்னும் குவாண்டனமோ சிறையில் இருப்பதாகப் பாகிஸ்தான் அமைச்சர் அப்தாப்கான் ஷெர்பாவோ கூறினார்.

# எம்மீது கடுமையான கட்டுப்பாடுகளை ஐ.நா விதித்தால் அதை ஏற்கமாட்டோம்

### -ஈரானின் அணுசக்தி தலைமை அதிகாரி தெரிவிப்பு

அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் ஈடுபட்டுள்ளதாகவும். இதனால் யுரேனியத்தைச செறிவூட்டும் பணியை முடக்கி வைக்க வேண்டும் என்ற ஐ.நா. கோரிக்கையை ஏற்க ஈரான் மறுத்து விட்டது. அத்தோடு ஐ.நா.வுக்கும் அது மிரட்டல் விடுத்துள்ளது.

இந்தப்பிரச்சினையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்குக் கொண்டு சென்றால், ஐ.நா.ஆய்வாளர்கள் சோதனை நடத்துவதற்கு தடைவிதிப்போம் என்றும் ஈரான் மிரட்டி உள்ளது. இதுபற்றி ஈரான் அணு சக்தித் தலைமை அதிகாரி ஹசனரொஹானி நிருபர்களிடம் கூறியதாவது. நாங்கள் அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் கடுமையான கட்டுப்பாடுகளை எங்கள் மீது விதித்தால், அதை ஒரு போதும் நாங்கள் ஏற்கமாட்டோம். கட்டுப்பாடுகளை ஏற்க வேண்டுமானால் தீர்மானம் நிறைவேற்றக்கூடாது. பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என்றார்.

அணுவாயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கடந்த ஆண்டு ஈரான் கையெழுத்திட்டுள்ளதால் அது ஐ.நா.வின் சர்வதேச அணு சக்தி ஏஜென்சியின் கடுமையான சோதனைகளுக்கு கட்டுப்பட வேண்டும்."எந்த ஒரு சர்வதேச அமைப்பும் எங்களைக் கட்டாயப் படுத்த முடியாது" என்றும் ஹாசன கூறினார்.

# சீன இராணுவத் தலைவர் ஜியாங் ஜெமின் பதவி விலகல்


சீனாவின் மத்திய இராணுவக் கமிஷன் (சி.எம்.சி) தலைவர் பதவியிலிருந்து ஜியாங் ஜெமின் (78) ஞாயிற்றுக்கிழமை விலகினார். புதிய இராணுவத் தலைவர் பொறுப்பை சீனக் குடியரசுத் தலைவர் ஹுஜிந்தாவோ ஏற்றுக் கொண்டார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் நான்கு நாள் பிளீனம் கூட்டத்திற்குப் பிறகு இந்த முடிவு அறிவிக்கப்பட்டது. சீன அரசின் செய்தி நிறுவனம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இதைத் தெரிவித்தது. ஜியாங் ஜெமின் 1989 முதல் 2002 வரை 13 ஆண்டுகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராக இருந்தார். சீனக் குடியரசுத் தலைவராக 2003 வரை, இரு முறை தொடர்ந்து பதவி வகித்தார். 25 இலட்சம் வீரர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய இராணுவமான சீனாவின் மக்கள் விடுதலைப் படைக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பு சீன மத்திய இராணுவ கமிஷனின் தலை வருடையதாகும.

# அமெ., துருக்கியக் கம்பனிப் பணியாளர் உட்பட 14 பேர் ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தல்


ஈராக்கில் உள்ள அமெரிக்க-துருக்கியக் கம்பனியில் வேலை செய்த 10 பேரை ஈராக் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

அபுபக்கர் அல்சித்திக்கின் சலாபிஸ்ட் பிரிகேட்ஸ் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் தீவிரவாத அமைப்புத்தான் இந்த 10 பேரையும் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளது."அமெரிக்க-துருக்கி கம்பனி, ஈராக்கைவிட்டு 3 நாட்களுள் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் 10 பேரையும் கொன்றுவிடுவோம்" என்று தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர். கடத்தப்பட்டவர்களை வீடியோப் படமாக எடுத்து அதை அல்ஜசீரா டி.வி.க்கு தீவிரவாதிகள் கொடுத்துள்ளனர். கடத்தப்பட்டவர்கள் எந்த நாட்டுக்காரர்கள் என்பதைத் தீவிரவாதிகள் தெரிவிக்கவில்லை.

இதேவேளை ஈராக்கில் லெபனான் நாட்டைச் சேர்ந்த 3 பேரும் அவர்களது காரை ஓட்டி வந்த ஈராக்கியச் சாரதியையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றதாக லெபனான் வெளியுறவுத்துறை அமைச்சகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது. பாக்தாத் பலூஜா நெடுஞ்சாலையில் வெள்ளிக் கிழமை இரவு இவர்கள் நான்கு பேரையும் துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். கடத்தப்பட்டவர்கள் பாக்தாத்தில் உள்ள சுற்றுலா நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தனர். கடத்தப்பட்டவர்களை மீட்கும் பொருட்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஈராக்கில் உள்ள தனது தூதரை லெபனான் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.



யமேக்கா குடியரசில் 150 பேர் காணாமல் போகவும் 50 பேர் பலியாகவும் காரணமான ஜீனி சூறாவளியின் தோற்றம் (நாசா நிறுவனத்தால் இப்படம் வெளியிடப்பட்டது)



பங்களாதேஷிலிருந்து வைத்தியர்களையும் தாதிகளையும் பெறுவதற்கு சவுதிஅரேபியா ஆயத்தமாவதால் அங்கு அவர்களுக்கு பாரியபற்றாக்குறையேற்படும் அச்சம் நிலவுகிறது. இங்கு புதிதாகப் பிறந்த குழந்தையை பரிசோதிக்கும் வைத்தியர் ஒருவர்.

# குர்திஸ் இனவாலிபர்கள் மூவரின் தலை துண்டிப்பு

ஈராக்கில் தற்போது நடைபெற்று வரும் அரசிற்கு ஆதரவாக குர்திஸ் சனநாயகக் கட்சி செயற்பட்டு வருகிறது. இந்தக் கட்சியைச் சேர்ந்த 3 வாலிபர்களை ஈராக் இஸ்லாமியத் தீவிரவாதப் பிரிவினர் கடத்திச் சென்று அவர்களது தலையை வெட்டிக் கொலை செய்துள்ளனர். இந்தக் காட்சி அந்தத் தீவிரவாதிகளின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# நியாயமான, யதார்த்தமான கோரிக்கையை சிங்கள ஆட்சியாளர் உதாசீனம் செய்கின்றனர்

### அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

(மட்டக்களப்பு)

**"நாம் யுத்த வெறியர்களல்ல. முழுமையாக சமாதான விரும்பிகளாகவே செயற்பட்டு வருகின்றோம். எமது தேசியத் தலைவரின் நிதானமும், பொறுமையும், சமாதானத்தின் பால் கொண்ட பெரும் அக்கறையும் இதனை சர்வதேச சமூகம் வரை உணர்த்தியுள்ளது."**

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் த. குயிலின்பன் தெரிவித்தார்.

உலக சமாதான தினத்தையொட்டி திருக்கோயில் மெதடிஸ்த தேவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஆராதனையின் பின்னர் அங்கு கருத்து வெளியிடுகையில் அரசியல்துறைப் பொறுப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப்புலிகள், விசேட அதிரடிப்படையினர், பொலிசார் உட்பட மக்களும் பெருந்தொகையானோர் இந்த ஆராதனை நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தொடர்ந்து பின்வருமாறு கூறினார்.

"புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டு அமைதி நிலவும் கடந்த இரண்டரை வருடகாலத்திலும் நாம் எதிர்பார்த்த சமாதானமோ, தீர்வோ எட்டப்படவில்லை.

நாம் கோரி நிற்கும் எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளெதனையும் வழங்க அரசு முன்வராதமை கவலைக்குரியதாகும்.இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் சமமான உரிமைகளுடன் வாழவேண்டு மென்பதே எமது அவாவாகும்.

இதனை எமது போராட்ட கால ஆரம்பம் முதலே வலியுறுத்தி வருகின்றோம்.

தென்பகுதி சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல சுதந்திரங்களையும், சலுகைகளையும், உரிமைகளையும் வடகிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களும் அனுபவிக்க வேண்டும்.எமது இந்த நியாயமான, யதார்த்தமான கோரிக்கையைச் சிங்கள ஆட்சியாளர்கள் உதாசீனம் செய்தே வருகின்றனர்.

இன்றைய சமாதான சூழ்நிலையிலும் நாம் எமது போராளிகள் பலரையும் இழந்தும், பொறுமை காத்து சமாதானத்துக்காக உழைத்து வருகின்றோமென்றால், எமது தேசியத்தலைவர்சமாதானத்தின் பால்காட்டும் பெரும் அக்கறைக்கு எடுத்துக்காட்டாகும்.

எமது தலைவரின் இப்பெரும் பொறுமையும், சமாதானத்தின் பால் கொண்டுள்ள அப்பழுக்கற்ற அக்கறையும் இன்று சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.நாம் யுத்த வெறியர்களாக ஒரு போதும் இருந்ததில்லை. சமாதானத்துக்காகவே என்றும் உழைத்துக் கொண்டிருப்பவர்கள்.

ஆனால் எமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை சிங்கள அரசு வழங்காது தொடர்ந்தும் ஏமாற்றி வந்தால் அதனை எவ் வழியில் பெறமுடியுமோ அவ்வழியில் எமது மக்களுக்குப் பெற்றுக்கொடுப்போம்.இதற்கு எவ்வித தயக்கமும் காட்ட மாட்டோம்" இவ்வாறு அவர் கூறினார்.



கடந்த 21ஆம் திகதி உருத்திரபுரம், சிவநகர், சிவன்சோலைக் கிராமத்தில் சிவன்கோவிலடியில் வீதிக்கு அருகில் நின்ற பாலைமரம் ஒன்று வீதியைக் குறுக்கறுத்து விழுந்துள்ளதையும், இது இன்னும் அகற்றப்படாமல் உள்ளதையும் படத்தில் காணலாம்.

## இடி தாக்கியது

(முல்லை)

முல்லைத்தீவு தமிழீழ காவல் பணிமனை வளாகத்தில் கடந்த 18ஆம்திகதிமாலை 3.00 மணிக்கு இடிதாக்கியது. இதனால் பயன் தரும் தென்னைமரங்கள் சில சேதமடைந்தன. (20)

## கருத்தூட்டல் நிகழ்வு

கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் சங்கம் என்பவற்றுக்கான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் செயலகத்தில், உதவி அரச அதிபர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கிராம,மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும், அதன் முக்கியத்துவம் தொடர்பாகவும், கிராமத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், பிரதிநிதிகள் குறைபாடுகள் தொடர்பாகவும் ,தேவைகள் தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்தனர்.

38கிராம மாதர் அபிவிருத்திச்சங்கங்கள் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இனிவரும் காலங்களில் இவ் அபிவிருத் திச்சங்கம் நல்லமுறையில் செயற்படுவதற்காக கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் த.சாந்தலிங்கம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். எனவும் உதவி அரசஅதிபர்சோதிநாதன் தெரிவித்தார். (20)

## அறுவடையில் ஈடுபட்டவர் பாம்புக்கடிக்கு இலக்கானார்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பத்துவீட்டுத்திட்டப் பகுதியில் சிறுபோக நெற்செய்கை அறுவடையில் ஈடுபட்டிருந்த ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்கானார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மு.ப. 11.00 மணியளவில் இடம்பெற்றது. இதன்போது சின்னையா-கண்ணா (வயது25) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையராவார். தற்போது இவர் கிளி.மாவட்டவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (12)

## சுயநிர்ணய உரிமைக்கான திட்டங்கள் அரசிடமில்லை எமது பலத்தின் மூலமே உரிமையை பெறமுடியும்

### பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

(மட்டக்களப்பு)

"சிறிலங்கா அரசுக்கு வடக்குத் கிழக்குதமிழ் மக்களின் சுயநிர்ணயஉரிமையை தரக்கூடிய திட்டங்கள் எதுவும் இல்லை. எமது உரிமையை எமது பலத்தின் மூலமே பெறமுடியும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

குருக்கள் மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த் விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய மட்டக்களப்பு மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தொடர்ந்து கூறுகையில்:-

கடந்த இரண்டு சகாப்தங்களாக 1ஆம் கட்டம், 2ஆம் கட்டம், 3[illegible]ம் கட்டம் என மூன்று ஈழப்போர் எமது மண்ணில் இடம் பெற்று விடுதலைப்புலிகளின் பலம் காரணமாக சிறிலங்கா அரசுக்கும் எமதுதேசியத்தலை வருக்கும் இடையில் புரிந்துணர்வு உடன் படிக்கை மேற்கொள்ளப் பட்டது. இரண்டரை வருடங்களாக உப்புச், சப்பு இல்லாத யுத்த நிறுத்தம் மட்டுமே உள்ளதே தவிர நிரந்தர சமாதானத்தை கொண்டு வரக்கூடிய எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனையின் அடிப்படையில் மீண்டும் பேசுவதற்கு .விடுதலைப்புலிகள் திட்டவட்டமாகக் கூறி இருந்தும் தற்போதைய அரசு தட்டிக் கழித்து தமது சிறிலங்காப் படையைப் பலப்படுத்துவதிலும், யுத்தத்திற்காக வலிந்து இழுக்கும் நடவடிக்கையிலும் தற்போது ஈடுபட்டுவருவதை தெளிவாக காணக்கூடியதாயுள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்கள் அனைவரும் நிதானமான முறையில் சிந்தித்து எமது உரிமையை வென்றெடுக்க உழைக்கவேண்டும. அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.இனவாதக் கருத்துக்களை கக்கிக்கொண்டு சமாதானத்தை குழப்பும் முயற்சியில் ஈடுபடும் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு கொடுத்து இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்காக அரசுடன் இணைந்ததாகக் கூறுகின்றது. எம்மைப் பொறுத்த மட்டில் எமதுவிடிவு எமது கைகளில் தான் தங்கியுள்ளது. இதனை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும் எனவும்பா. அரியநேத்திரன் எம்.பி. கூறினார். பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி உரையாற்றுகையில்:- இந்த அரசாங்கத் தினாலோ வேறு சிங்கள அரசினாலோ பேச்சு வார்த்தை மூலம் சமாதானத்தை வென்றெடுக்க முடியுமென ஒரு போதும் எவரும் நினைக்கவேண்டாம். எமது உரிமை எமது படைப் பலத்தினால் மட்டுமே உண்டு எனவும் கூறினார்.

கலைவாணி பாலர் பகல் பராமரிப்பு நிலையத் தலைவர் செ.சத்தியேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்புமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்த .கனகசபை, க.தங்கேஸ்வரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மா.தயாபரன், பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.உலகேஸ் வரன், சிறுவர் நன்நடத்தை உத்தி யோகத்தர் எம்.எம்.எச் . நயூமுதீன் உட்பட பலரும் உரையாற்றினா.


## நியாப் திட்டத்தில் புனரமைக்கப்பட்ட பாலத்தால் வாகனப்போக்குவரத்துத் தடை

### -ஆபத்தும் எதிர்கொள்ளப்படுகிறது.

(அலுவலக செய்தியாளர்)

நியாப் திட்டத்தினரால் புனரமைக்கப்பட்ட உருத்திரபுரம் ,கோணாவில் வீதியில் அமைக்கப்பட்ட பாலங்களில் ஒன்று 7.5அடி அகலத்தில் அமைக்கப்பட்டுள்ளதனால் போக்குவரத்திற்கு பெரும் இடையூறாக உள்ளது.நியாப்திட்டம் 02 ஆரம்பிக் கப்படத் தயாராகி வரும் இந்த நிலையில் நியாப் திட்டம் 1இல் புனரமைக்கப்பட்ட வீதிகளில் ஒன்றான உருத்திரபுரம் கோணாவில் வீதியில் அமைக்கப் பட்டபாலங்களில் ஒன்று இவ்வாறு அகலம்கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவ் வீதியால் உந்துருளிகள் மிதிவண்டிகள் தவிர்ந்த ஏனைய ஊர்திகள் செல்ல முடியாதுள்ளதோடு, முக்கிய தேவைக்காக இப்பாலத்தினைக் கடக்க முயன்ற பாரஊர்தியின் சக்கரங்கள் பாலத்தை உடைத்துள்ளது. இதேவேளை இப்பாலத்தை அமைப்பதற்காக பயன்படுத்திய சிமெந்துக் கலவையும் மணல்தன்மையுடையதாகக் காணப்படுவதால் இப்பாலம் மேலும் உடைவதற்கான வாய்ப்பு உள்ளது. அத்தோடு ஏற்கனவே அமைந்திருந்த நீர்கடத்தும் பாரிய நீர்க்குழாயினையே மீண்டும் பயன்படுத்தியதால் உடைந்த, நீளம் குறைந்த இக் குழாய்க்கேற்பவே இப் பாலம் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச,தீ)



## புதுக்குடியிருப்பு இனப்படுகொலையின் 14—ஆவது ஆண்டு நினைவு நாள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் நடாத்தப்பட்ட இனப்படுகொலையில் 17 பொது மக்கள் மரணித்த 14 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று செவ்வாய்க்கிழமை மண்முனைப் பற்று பிரதேசபிரிவில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந் நாளில் கறுப்பு, வெள்ளைக் கொடிகளை வீதிகள் தோறும் தொங்கவிட்டு இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் மணி ஒலிக்கச் செய்து, 17 பொது மக்களையும் நினைவு கூருமாறு மண்முனைப்பற்றுப் பிரதேச விளையாட்டு ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

# ஊரெழுவில் அவதரித்த உத்தமனே திலீபா!



தமிழீழத் தாகம் கொண்டு
தனித்திருந்து போர் தொடுத்தாய்
தங்கத் தமிழ் மகனே!
எங்கள் திலீபன் அண்ணா

ஊரெழுவில் அவதரித்த
உத்தமனே திலீபா!
உரிமைக்காய் உருகிட்ட
மெழுகு வர்த்தி ஆனவனே!

பாரதத்துப் பாதகரை
பரிகாசம் செய்யவென
பன்னிரு நாட்கள் உண்ணா நோன்பிருந்து
உயிர் நீத்தவனே!

சோதனை தந்த காந்தி தேசத்திற்கு
அகிம்சையின் வடிவம் சொன்னாய் –திலீபா!
பார்புகழ் போர் தொடுத்த
பார்த்தீபன் ஆனவனே!

வயிற்றில் பசி வளர்த்து
வல்லரசின் திரைகிழித்து
மக்கள் விடிவிற்காய்
மரணித்த மாவீரனே!

நினைவுக்கு எட்டாத
உண்ணா நோன்பிருந்து
நெஞ்சமதை விட்டகலா நினைவொன்றைத்
தந்துவிட்டுச் சென்றாயோ?

காந்திநாட்டின் கபடமதை
காலத்தால் புரியவைக்க
காத்திருந்து நோன்பிருந்து
காவியமானான் எங்கள் திலீபன்.

பதினேழு வருடங்கள் –என்ன
எத்தனை வருடமானாலும் –உன்
தாயகம் நோக்கிய கனவுகள்
நனவாகும் ஓர் நாள்..............

ம.விஜிதா

## தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவு நிகழ்வுகள் யாழ்.குடாநாட்டில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆவது ஆண்டிற்கான நினைவுதினத்தையொட்டி யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள், வைத்தியசாலைகள், சனசமூக நிலையங்கள், வீதிகள் எனப் பொது இடங்கள் பலவற்றிலும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொதுஅமைப்புக்களின் ஒன்றியம், கூட்டுறவாளர் அமைப்புகள், மாணவர் ஒன்றியங்கள் என்பவற்றின் ஏற்பாட்டில் இவ்வாறான சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றில் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள், கூட்டுறவாளர்கள் எனப்பலரும் உணர்வெழுச்சியுடன் பங்கு பற்றியும் வருகின்றனர்.

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கப் பணியாளர், உறுப்பினர் லெப்.கேணல் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கின்றனர். மேற்படி ஆரம்ப நிகழ்விற்கு சங்கத்தலைவர் த.சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். பதாகைகளாலும், மலர்த் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் தியாகி திலீபனின் படம் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டது.

பொதுமுகாமையாளர் பொதுச்சுடரை ஏற்ற, ஏனைய முகாமை உத்தியோகத்தர்கள் ஈகச்சுடரை ஏற்றினார்கள். சங்கப்பணியாளர்களும், கூட்டுறவாளர்களும் பெருமளவில் குழுமியிருந்தார்கள்.

தலைவர் தனது உரையில் நிகழ்வின் முக்கியத்துவத்தை விளக்கினார். அவர் தனது உரையில் திலீபனின் போராட்ட வாழ்வையும், உண்ணாவிரதத்தின் சாதனையையும் குறிப்பிட்டார். மேலும் அவர் தனது உரையில் 15ஆம் திகதி ஆரம்பமாகி 26ஆம் திகதி நிறைவுபெறும் 12 நாட்களிலும் சிரமதானம், கருத்துரைகள், பொத்தகங்கள் ,அறிமுகங்கள், பொத்தகங்கள், சஞ்சிகைகள் காட்சிப் படுத்தல், தமிழீழப் போராட்டம் தொடர்பான திரைப்படக்காட்சி என்பன இடம்பெறும் என்றும் அறிவித்தார்.

சங்கச் செயலாளரும், கல்வி உத்தியோகத்தரும் தியாகி திலீபனை நினைவுபடுத்தி உரையாற்றினார்கள். (33)

## தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவாக தென்மராட்சியில் மருத்துவ முகாம்

தென்மராட்சி தேசிய எழுச்சிப்பேரவையின் ஏற்பாட்டில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி 'றிபேக்' கல்லூரி மண்டபத்தில் தியாகதீபம் லெப்.கேணல் திலீபன் அவர்களது 17ஆம் ஆண்டு நினைவாக நேற்று முன்தினம் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00மணிவரை இடம்பெற்ற இந்நிகழ்வு தேசிய எழுச்சிப் பேரவை தென்மராட்சிக்கோட்ட செயலாளர் சந்திர சேகரன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பொதுச்சுடரினை தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களும், லயன்ஸ் கழகத் தலைவர் கா.நவரத்தினம் அவர்களும் ஏற்றிவைத்தனர். வரவேற்புரையைத் தொடர்ந்து சிறப்புரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர், தியாகி திலீபன் நினைவு நாட்களில், மக்களுக்காக மரணித்த இந்த உத்தம தியாகி நினைவாக, மக்களுக்குப் பயன்படும் விதத்தில் மருத்துவப் பரிசோதனை முகாம் அமைந்ததைக் குறிப்பிட்டார்.

அடுத்து மருத்துவப்பரிசோதனைகள் இடம்பெற்றன. இதில் ஐந்நூறுக்கும் அதிகமானோர் பயன்பெற்றனர். சித்திவினாயகர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற மருத்துவப் பரிசோதனையில் கண்ணாடி பெறுவதற்குத் தெரிவானோருக்கு தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் அவர்கள் முதல் கண்ணாடியை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

## காரைநகர்-கிழுவனை வாய்க்கால் 10 வருடங்களாகப் புனரமைக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் காரைநகரில் உள்ள கிழுவனை வாய்க்கால் கடந்த10 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகிறது.

கிழுவனைக் குளத்திலிருந்து கடலிற்கு நீரினைப் பாய்ச்சுவதற்கான மேற்படி வாய்க்கால் புனரமைக்கப்படாததால் குளத்தின மேலதிக நீர் கடல்நோக்கி வழிந்தோடமுடியாது ஆங்காங்கே தேங்கி நிற்கிறது.

இதனால் இவ்வாய்க்கால் ஓரங்களில் உள்ள விவசாயக் காணிகளுள் வெள்ளம் உட்புகுந்து வருகின்ற நிலை காணப்படுகிறது. இது குறித்து அப்பகுதி விவசாய அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டும் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்காமையை இட்டு விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## கிளாலி, கெற்பலி, கேடில்ஸ் பகுதி மக்களை அச்சுறுத்தும் இராணுவப் புலனாய்வுப்பிரிவினர்

(தென்மராட்சி)

கிளாலி, கெற்பலி, கேடில்ஸ் நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் காலை முதல் மதியம் வரை சிறிலங்கா இராணுவத்தின் துணையுடன் இராணுவப்புலனாய்வுப் பிரிவினர் இப்பகுதியில் உள்ள மக்களின் வீடுகளுக்குச்சென்று மாவீரர்கள், போராளிகள் பற்றிய விபரங் களைச் சேகரித்ததுடன் இவ்விப ரங்களைத் தரமறுத்த குடும்பங் கள் சில மிரட்டப்படுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துமீறி நுழைந்த படையினர் வீடுகளில் மாவீரர்களின் படங்களைப் பார்த்து எந்தப் போரில், எந்த இடத்தில் இவர் இறந்தவர், எத்தனை ஆண்டுகள் இவர் இயக்கத்தில் இருந்தவர்? என்று கேள்விகள் கேட்டு மிரட்டுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் மீளக்குடியேறிவரும் மக்கள் இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கையால் மீளக்குடியேறுவதற்கு அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (28)

## கல்வி அபிவிருத்திக்கு யாழ்.இல் கி.பொ.ஆய்வு அபி.நிறுவனம் உதவி

கிராமியப் பொருளாதார ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் யாழ். குடாநாட்டில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் வறுமையால் கல்வியை இடைநிறுத்திய மாணவர்களை கற்றல் நடவடிக்கைகளில் இணைத்தல், கற்றல் உபகரணங்களை வழங்கல், ஊக்குவிப்புகளை வழங்கல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமமட்ட அமைப்புக்களுக்காக இவ்வாறான உதவிகள் வழங்கப்படுகின்றன. (33)

## மிதிவெடிகள் அகற்றுதல், மக்கள் குடியேறுதல் படையினரின் பாதுகாப்பிற்கு குந்தகமானது

### -வசாவிளான் மக்களுக்குப் படையினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வசாவிளான் பகுதியில் உள்ள படையினரால் கைவிடப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு படையினர் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் இப்பகுதி யில் உள்ள பல பிரதேசங்களையும் ஆக்கிரமித்து வைத்திருந்த படையினர், அரசு புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து சில பிரதேசத்தைக் கைவிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து படையினரால் கைவிடப்பட்ட பகுதிகளில் காணப்படும் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்றி, அப்பகுதிகளில் மக்களைக் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த போது மேற்படி பகுதிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்றுவதும், அப்பகுதிகளில் மக்கள் குடியேறுவதும் தமது பாதுகாப்பிற்குக் குந்தகமாக அமையும் எனச் சுட்டிக்காட்டிய படையினர் அதற்கு அனுமதி மறுத்து விடுகின்றனர். இதனால் அங்கு தாம் குடியேற முடியாத சூழ் நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (33)

## யூனியன் கல்லூரியைப் புனரமைக்க படையினர் முட்டுக்கட்டை

யாழ்.வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் காணப்படும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையிலேயே இயங்கிவருகிறது.

மேற்படி பாடசாலை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளமையால் இப்பாடசாலையின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்குப் படையினர் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர். (33)

## யாழ்.கட்டுடையில் கசிப்பு உற்பத்தியை ஊக்குவிக்கும் சிறிலங்காப் பொலிசார்

யாழ்.மானிப்பாயில் உள்ள கட்டுடைப்பகுதியில் சட்டவிரோதக் கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற போதும் அதனைத் தடுத்து நிறுத்த சிறிலங்காப் பொலிசார் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படிப் பகுதியில் தொடரும் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளால் அங்கு மதுப்பிரியர்களின் தொல்லைகளும், அட்டகாசங்களும் அதிகரித்திருக்கிறது.

சமூக சீரழிவுகளை ஏற்படுத்தத்தக்க கசிப்பு உற்பத்தி குறித்துப் பொலிசாருக்கு மக்கள் தெரிவித்துள்ள போதும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காது புறக்கணித்து வருகின்றனர். சமூக சீரழிவுகளை ஏற்படுத்தும் இத்தகையை கசிப்பு உற்பத்தி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தப் பொலிசார் நடவடிக்கை எடுக்காததையிட்டு அப்பகுதி நல்லொழுக்க சம்மேளனம் விசனம் தெரிவித்துள்ளது. (33)

# சமாதானத்தைத் தேடும் உலகம்



## -இன்று உலக சமாதான தினம்-

முத்தையனூர்-ப.துஷயந்தன்

இன்று உலக சமாதானதினம் பூமிப் பந்தின் அறிவு ஜீவிகளான மனித இனம் தேடிக் கொண்டிருப்பதும், கிடைத்தற்கரிய துமாய் இருப்பதும் இந்த சமாதானம். உயிர்ப் பிறப்பால் மனிதர் என்ற நிலையில் ஒன்றுபட்டிருந்தாலும் அவர்களிடையே காணப்படுகின்ற பல்வேறுபட்ட பிரிவினைகளின் காரணமாக மனித சமூகம் இன்று தன்னிடையே மோதி அழிகின்ற நிலையில் சமாதானம் என்பதும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

மனித சமூகம் சந்தித்து வருகின்ற அழிவுகளுக்கும், அவலங்களுக்கும் மனிதனே காரணமாக இருக்கின்ற கசப்பான உண்மையை ஏற்றுத்தான் ஆக வேண்டும். நாடு, இனம், மதம், மொழி, சாதி என்ற அடிப்படையில் மனிதன் தன்னைப் பிரித்துப் பார்க்க முயன்ற நிலையில் தோன்றிய அமைதியற்ற உலகின் தேடலே சமாதானமாகத் தேவைப்படுகிறது.

இன்றைய உலக போக்கில் வன்முறைகள் தழுவிய அதிகாரப் போட்டிகள் வலுப்பெற்று வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது. வலு உள்ளவன், வலுக் குறைந்தவனை அடக்கி ஆழ நினைப்பதும், அடக்கப்படுபவர்கள் அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடுவதும் உலகின் நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் சாதாரண நிகழ்வாகிவிட்டது. இதற்கு இலங்கைத்தீவும் விதிவிலக்கல்ல. பெரும்பான்மை இனமாகிய சிங்கள இனம் சிறுபான்மைத் தமிழ்ச்சமூகத்தை அடக்கியாழ நினைத்ததன் வெளிப்பாடாக இலங்கை யுத்த பூமியாக மாறியது. சிறுபான்மைத் தமிழினம் அடக்கு முறைக்கு எதிராகத் போராடப் புறப்பட்டு தன் பலத்தை நிரூபித் ததால் சமாதானத்தின் அவசியம் இன்று வலுப்பெற்று நிற்கிறது.

இங்கு ஒரு உண்மை புலப்படுகிறது. அதாவது அடக்கப்படுகின்ற இனம் தன்னை நிலை நிறுத்துவதற்குப் போராட எத்தனித்து வெற்றி பெறுகின்ற நிலை தோன்றுகிற கட்டத்தில்தான் சமாதானம் தொடர்பான கருத்துக்களும் முனைப்புக்களும் வலுப்பெறுகின்றன. 'இலங்கைக்கு மட்டுமான சம்பவமாக இதனைக் கொள்ள முடியாது. உலகநாடுகள் அனைத்திற்கும் இவ்விடயம் பொருந்தும்.

உலகை உலுக்கிய உலக மகா யுத்தங்களின் விளைவின் பின் சமாதானம் தொடர்பான கருத்துருவாக்கம் வலுப்பெற்றது.

1944 ஆம் ஆண்டு நடைபெற்று முடிவிற்கு வந்த இரண்டாம் உலக மகா யுத்தத்தின் கொடூரம் உலகை உலுக்கியது. குறிப்பாக ஜப்பான் படைகளின் நடவடிக்கைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்கா ஜப்பானின் கிரோசிமா, நாகசாகி போன்ற நகரங்களில் வீசிய அணுகுண்டினால் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டும்., அங்கவீனர்களாகியும் இருந்த கொடூரம் உலகின் மனச்சாட்சியை உலுக்கியது. அந்தக்காலப்பகுதியில் எழுந்த சமாதானத்தின் தேவை 1945 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபை தோற்றம் பெறுவதற்கான காரணமாக அமைந்தது. இந்த ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதன் நோக்கம் அப்போதைய உலகச் சூழலுக்குப் பொருந்தும் வகையில் பயன்பெற்றது என்றே கூற வேண்டும். ஏனெனில் உலக நாடுகள் ஒன்றை ஒன்று மதித்து நடக்கக்கூடிய சூழலை உருவாக்கி இருந்தது. குறிப்பாக வீட்டோ அதிகாரம் என்ற ஒரு அதிகார முறையால் வல்லரசு நாடுகள் ஒற்றுமையாக இருந்து தீர்மானங்களை எடுக்கக்கூடிய நிலை காணப்பட்டது. ஆனால் தற்போதைய காலகட்டத்தில் ஐக் கிய நாடுகள்சபை என்பது குறிப்பிட்ட சில வல்லரசு நாடுகளின் பக்கசார்பு நிலையில் செயற்படுவதால் உலகசமாதானம் என்பது வலுவிழந்து போய்க் கொண்டிருக்கிறது. இன்றைய உலகில் அதிகரித் துவரும் நாடுகள்இடையிலான போரின் காரணங்களுக்குத் தீர்வுகாண முடியாது மௌனித்து இருக்கின்ற ஐக்கியநாடுகள் சபை தற்போதைய காலகட்டத்திற்குப் பொருந்தும் வகையில் செயல்படுகிறதா? என்ற சந்தேகம் உலகின்சமாதான விரும்பிகளிடம் தோன்றத்தான் செய்கிறது.

உலக வல்லரசாகத் தன்னைக் காட்டிக்கொள்ள நினைக்கும் குறிப்பிட்ட சிலநாடுகள் ஐக்கிய நாடுகள் சபையைத் தன்சார்பு நிலைக்குக்கொண்டுவந்து சில நாடுகளின் இறைமையைச் சிதைக்கும் நடவடிக்கை தொடரும் தற்போதைய காலகட்டத்தில் உலகசமாதானம் என்பது கேள்விக் குறியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

---

# வாக்களிக்க தே.அ.அட்டை கட்டாயமாக்கல் பிரேரணை பாராளுமன்றில் நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வாக்களிப்புக்கு தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்கும் அரசாங்கத்தின் பிரேரணை எதிர்வரும் புதன் கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி சில திருத்தங்களுடன் இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க இணங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

உத்தேச சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய ஒருவருடத்தின் பின்னரே இச் சட்டம் அமுலுக்கு வரும். இந்த இடைக் காலத்துக்குள் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கப்படும். ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அதற்கான பொறுப்பை ஏற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர் காலத்தில் வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டையில் சம்பந்தப் பட்டவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன பதியப் படும். இதனால் வாக்கு மோசடி இடம்பெறுவதை முற்றாக ஒழிக்கலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

ஐ.ம.சு முன்னணித் தலைவர் தினேஸ்குணவர்த்தன தலைமையிலான பாராளுமன்றக் குழு வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்க வேண்டுமென சிபாரிசு செய்திருந்தமை தெரிந்ததே. வாக்களிப்புக்கு தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் பிரேரணைக்கு இ.தொ.கா. ஜாதிக ஹெல உறுமய உட்பட சிறிய கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான தொழிற்பயிற்சி 2 வாரங்களுக்குள் ஆரம்பிக்கும்

(கொழும்பு)

இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான தொழிற்பயிற்சி அடுத்த 2 வாரங்களுக்குள் அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிற்றிய தெரிவித்த தகவலில் முதற்றொகுதியில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் தற்பொழுது பயிற்சியினைப் பெற்று வருகின்றார்கள். பயிற்சி பெறத் தகைமை பெறாத பட்டதாரிகள் தமது மேன்முறையீடுகளைத் தெரிவிக்க முடியுமென்றும் பிரதியமைச்சர் கூறியுள்ளார். இந்த மேன்முறையீடுகள் இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னதாக அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# முல்லை கட்டம் 1 வைத்தியசாலை விடுதி நிர்மாணிப்பில் தாமதம்

(முல்லை)

முல்லைமாவட்டக் கட்டம் I இல் 24 கட்டில் கொண்ட நோயாளர் தங்கி சிகிச்சைபெறும் விடுதி அமைக்கப்படுகின்ற போதும், இது வரை அவ்வேலைகள் பூர்த்தியாக்கப்படவில்லை.

இவ்வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டட நிர்மாணப் பணிகள் மிகவும் ஆமை வேகத்தில் நடைபெறுகிறது. ஆண் நோயாளர்கள் தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஒருவிடுதியில் இருப்பதால் தூசு, மழைச்சாரல் என்பவற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போது நோயாளர்கள் தங்கிநின்று சிகிச்சை பெறுவதற்கே இடமில்லாமல், நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதை தினமும் அவதானிக்க முடிகிறது.

சிறுவர்களும், கர்ப்பவதிகளும், பெண்நோயாளிகளும் ஒரே விடுதியிலேயே சிகிச்சை பெறுகின்றனர். (20)

# ஜாதிக ஹெல உறுமயவிற்கு எதிராக தேரர் மேன்முறையீட்டு மனுத் தாக்கல்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியிலிருந்து தாம் நீக்கப்பட்டதை ஆட்சேபித்து பாராளுமன்ற உறுப்பினரான வண.அப்பறகே பஞ்ஞானந்ததேரர் உயர்நீதி மன்றத்தில் விசேட மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இவர் இம்மனுவில் ஹெல உறுமயக் கட்சியின் தலைவர், செயலாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு, தாம் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை தவறானது எனவும், சட்ட விரோதமானதெனவும் உத்தரவிட வேண்டுமெனக் கோரியுள்ளார்.

ஹெல உறுமய தலைமைப் பீடம் தம்மீது 19 குற்றச்சாட்டுக்களை அபாண்டமாகச் சுமத்திக் கட்சியிலிருந்து நீக்கியதாக உத்தியோக பூர்வமாக எழுத்து மூலம் அறிவித் தது. என்றும் மனுவில் முறைப்பாடு செய்துள்ளதுடன், அக்கடிதம் வலுவற்றதொன்று என்று நீதிமன்றம் பிரகடனப்படுத்தவேண்டுமெனக் கோரியுள்ளார்.

தாம் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக உள்ளதை நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தரித்து நின்ற கப்பலில் கொள்ளையிட்டோர் கைது!

(கொழும்பு)

கொழும்புத் துறை முகத்தில் தரித்து நிற்கும் கப்பல் ஒன்றில் இருந்து 15 மூடைகள் செத்தல் மிளகாய்,100 பொலித்தீன் பாய்கள் என்பவற்றைத் திருடிய 5 பேரைத் துறைமுகப் பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். இவர்களை 14 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிகநீதவான் முஹம்மட் இசர்டீன் உத்தரவிட்டார். அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் எம்.எஸ்.வீ மரியா அன்ரனி என்ற கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டருந்தபோது இத்திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சதொச நிறுவனத்தை அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்க வேண்டும்

## சனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் பொருட்களின் விலைகள் தினந்தோறும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றபடியால், தனியார் மயமாக்கிய ச.தொ.ச நிறுவனத்தை. அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்று நடத்த வேண்டும் என சந்திரிகா குமாரதுங்க அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். ச.தொ.ச நிறுவனத்தை மீண்டும் கையேற்றால் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடி யும் என சனாதிபதி இங்கு கூறி யுள்ளார்.

## நன்னீர் மீனினங்கள் வரட்சியில் அழிவு

தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக ஈச்சங்குளத்தில் முற்று முழுதாக நீர்வற்றியுள்ளதால் இப் பகுதியில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன், நன்னீர் மீனினங்கள் அழிவடைந்து துர்நாற்றம் வீசுகிறது. இதனால் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களைஎதிர்நோக்குகின்றனர். இ



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## முரளிதரன் அணியின் பலம் மனந்திறக்கிறார் -சங்கக்கார



சிறிலங்கா கிரிக்கெட் அணியின் குமார்சங்கக்கார துடுப்பாட்டத்திலும், விக்கெட் காப்பிலும் தனது திறமையை வெளிப்படுத்திவருகிறார். அது தற்போது உலகின் தலைசிறந்த வீரரான அடம்கில் கிறிஸ்ட்டின் இடத்திற்கு அவரை இட்டுச்சென்றுள்ளது. அதுதொடர்பாக அவர் அளித்த பேட்டியிலிருந்து,

**கேள்வி:-அண்மைக் காலங்களில் நீங்கள் சுறுசுறுப்பான, உறுதியான நிலைக்குத் திரும்பியிருப்பதாகத் தோன்றுகிறதே, தொடர்ந்து அதே நிலையில் இருப்பீர்களா?**

பதில்:- நாங்கள் கடந்த காலங்களில் விளையாடும் போது உறுதியற்ற மென்மையான போக்கில் ஆடியதால் எதிரணிகள் அதனைச் சாதகமாக்கி வெற்றி பெற்றன. உண்மையில் எதனைச் செய்யவேண்டும்? எதனைச் செய்யக்கூடாது? எனத் தெரிந்து வைத்திருக்கிறோம். சில ஊடகங்கள் தவறான விமர்சனங்களை வெளியிடுகின்றன.

**கேள்வி:- உங்கள் அணியில் வளர்ந்துவரும் வீரர் பற்றிக் கூறுவீர்களா?**

பதில்:- பாவீஸ் மகறூப் அளப்பரிய பணியை அணிக்குச் செய்துவருகிறார். இதுவரை நடந்த போட்டிகளில் அவரின் பந்து வீச்சும், துடுப்பாட்டமும் வரவேற்கத்தக்கதாகவுள்ளது. அத்துடன் லசிந்த மாலிங்கவும் பந்துவீச்சில் சிறந்துவிளங்குவதால் இருவரின் பங்களிப்பும் அணிக்கு எதிர்காலத்தில் நன்மைபயக்கும்.

**கேள்வி:- முத்தையா முரளிதரன் இல்லாமல் அணி எவ்வாறு சமாளிக்கிறது?**

பதில்:- உலக அணிகள் தமது அணியில் முரளிதரன் இல்லையே என ஏங்கலாம். சிறிலங்கா பல போட்டிகளில் முரளியின் பங்களிப்புடன் வெற்றிபெற்றுள்ளது. அவரை அணிக்குள் வைத்திருப்பதால் எமக்குப் பெருமையும், மகிழ்ச்சியும் ஆனால் தற்போது அணியில் பங்கேற்காதது வருந்தத்தக்கதே. ஆயினும் அவர் அணியில் இல்லாதிருப்பது ஏனைய பந்துவீச்சாளர்களுக்கு ஒருவாய்ப்பைப் பெற்றுத்தருகிறது. முரளிதரன் ஒருபோட்டியில் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய அதே வேளை, இப்போது ஏனைய பந்து வீச்சாளர்கள் ஓரிரு விக்கெட்டுக்களையே பெறுகின்றனர். முரளியிருக்கும் போது எமது அணி பலமுள்ளதாகவே இருக்கும்.

**கேள்வி:- விக்கெட் காப்பாளராகவும், துடுப்பாட்ட வீரராகவும் செயற்படுவதில் நீங்கள் உச்சக்கட்ட மகிழ்வைப்பெறுகிறீர்களா?**

பதில்:- ஒருநாள் போட்டிகளில் அது வினோதமான பணி. முதலில் நாங்கள் ஆடுகளம் பற்றித் தீர்மானம் எடுக்கவேண்டும். அதனைத் தொடர்ந்து போட்டி முடிவடையும் வரை செயற்படவாய்ப்பு ஏற்படும். ஆனால் டெஸ்ட் போட்டியில் குறிப்பாக இந்தியாவுடன் டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் போது உடலிலும் உள்ளத்திலும் பல வீனம் தோன்றலாம்.

**-வடிவேல்**

---

## அவருக்கு நிகரானவரே

இயன் பொத்தம் 1990 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஓய்வு பெற்ற பின்னர் இங்கிலாந்து கிரிக்கெட் அணி சரியான சகல துறை வீரருக்காக ஏங்கிக் கொண்டிருந்தது.

ஒரு காலகட்டத்தில் இங்கிலாந்து வீரர்கள் யாராவது துடுப்பாட்டம், பந்து வீச்சில் ஓரளவு சிறப்பாகப் பிரகாசித்து விட்டால் போதும் அந்த நாட்டுப் பத்திரிகைகள் அவரை அடுத்த இயன் பொத்தம் என்று பாராட்டி எழுதித் தள்ளிவிடும். எதிர்பாராதவிதமாகப் பொத்தமுடன் ஒப்பிட்டுப் பேசிய யாரும் தேறவில்லை.

இயன் பொத்தம், கபில்தேவ் போன்ற சிறந்த சகலதுறை வீரர்கள் ஆண்டுதோறும் வந்துவிட மாட்டார்கள் என்பதை ரசிகர்கள் உணரவேண்டும். அபரிமிதமான திறமை கொண்ட சகலதுறை வீரர்கள் ஒரு அணிக்கு 15 ஆண்டுக்கு ஒருவர் கிடைத்தாலே பெரிய அதிர்ஷ்டமாகும்.

இந்தவகையில் ஐ.சி.சி மினி உலகக்கிண்ணப் போட்டியில் சிறிலங்கா அணியை மண்கௌவ்வச்செய்த பெருமை கொண்ட வீரராக இங்கிலாந்தின் அன்ரூ பிளின்டொப் திகழ்கின்றார்.



பிளின்டொப்

இங்கிலாந்தின் லாங்கஸ்ரியன் வீரரான அவர் ஏராளமான திறமைகளைக் கொண்டவர். அவர் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் துடுப்பாட்டம், பந்துவீச்சு என்பவற்றில் குறையாத ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றார்.

சர்வதேசக் கிரிக்கெட்டைப் பொறுத்தவரை ஒருநாள், டெஸ்ட் போட்டிகளில் சிறந்த சகலதுறை வீரர் யார் என்றால் பிளின்டொப் என்ற கருத்துக்கு மாற்றுக்கருத்தே கிடையாது.

அவர் இக்கட்டான நிலை யில் இருக்கும் போதெல்லாம் சரிவில் இருந்து அணியை மீட்டெடுப்பதில் கைதேர்ந்தவர்.

துடுப்பாட்டத்தின் போது பந்துவீச்சாளர்களை எதிர்கொண்டு ஓட்டங் களைக் குவிக்கும் வேகம் அலாதியானது. அவர் ஓட்டங் களைக் குவிக்க ஆரம்பித்து விட்டால் கட்டுப்படுத்துவதற்கு எதிரணியினர் பெரும் போராட்டமே நடத்தவேண்டும்.




பிளின்டொப்

எனவே இங்கிலாந்தின் மிகப்பெரும் சொத்தாகவும், எதிரணி அஞ்சிநடுங்கும் வீரராகவும் மாறியுள்ள பிளின்டொப் மினி உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியில் கிரிக்கெட்டின் வல்லரசாகத் திகழும் அவுஸ்திரேலியாவுக்குத் துரும்புச் சீட்டாக மாறுவாரா? என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகவுள்ளது.

---

## மகத்தான வெற்றி



மினி உலகக் கிண்ணப் போட்டியில் மேற்கிந்தியத்தீவு தென்னாபிரிக்க அணிக்கு எதிராக பெற்ற மகத்தான வெற்றி மூலம் அவ் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டி எவ்வளவுக்கு எவ்வளவு முக்கியமோ அதை விட ஒரு படி மேல் மேற்கிந்திய தீவுக்கு முக்கியம். அந்த அணியின் ஆட்டம் அண்மைக்காலமாக அதள பாதாளத்தில் இருக்கிறது. வீரராக அல்லாது அணித் தலைவராக லாறாவுக்கு மிகவும் முக்கியமானது. அணித்தலைவர் பதவி பறிபோகும் நிலையில் இருந்த லாராவுக்கு கிடைத்த சிறப்பான வெற்றியாக அமைந்துள்ளதுடன் அவரை பற்றி விமர்சிப்பவர்களுக்கு பதிலடி கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.



லாறா

தென்னாபிரிக்காவுக்கு எதிராக களத்தடுப்பில் மேற்கிந்தியத்தீவு எவ்வாறு செயற்பட்டதோ அதுபோல் துடுபபாட்டததிலும் நீண்ட காலத்திற்கு பின்னர் திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி பெற்றுள்ளது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் குறைந்த ஓட்டங்களுக்கு வீழ்த்தப் பட்ட போதும் அனுபவம் வாய்ந்த இடைநிலை ஆட்டக்காரர்கள்-பொறுப்புடன் ஆடி வெற்றிக்கு வித்திட்டனர்.

இதில் துணைத்தலைவர் சர்வான் திட்டமிட்ட முறையில் செயற் பட்டார். அனுபவம் வாய்ந்த பொலக்கின் பந்து வீச்சை நிதானமாக எதிர்கொண்ட சர்வான் மற்றைய பந்து வீச்சாளர்களின் பந்துகளை விரட்டி அடித்து ஓட்டங்களைக் குவித்தார். ஒரு துடுப்பாட்ட வீரர் நிதானமாக ஆடும்போது மற்றைய வீரர் அடித்து ஆடுவது சரியானதாகும். அப்போதே எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியும். சர்வான் நிலைத்து ஆட சந்தர்போல் அதிரடியாக ஆடினார். இதனால் நெருக்கடியான போட்டி ஒன்றில் மேற்கிந்தியத்தீவு நீண்ட இடைவேளைக்கு பின்னர் வெற்றி பெற்றுள்ளதுடன், பெரிய போட்டி ஒன்றில் அரையிறுதி வாய்ப்பையும் பெற்றுள்ளது. இது அந்த நாட்டு அணிக்கு மட்டுமல்ல அந்நாட்டு கிரிக்கெட்டுக்கே மகிழ்ச்சி அளிப்பதாக மாறியுள்ளது.

---

## வீழ்த்தப்படுபவர்கள்

கிரிக்கெட் போட்டிகளில் மத்தியஸ்தம் வகிப்போர் எப்போதும் வீழ்த்தப்படும் ஒருவராகின்றனர். அவர்கள் இலகுவில் தாக்கப்படக்கூடியவர்கள். ஏனெனில் போட்டிகளில் அளிக்கும் தீர்ப்பு சரியானதாக இருககும் போது ஒருவரும் ஒன்றும் கூறுவதில்லை,ஆனால நடுவர்கள் தவறுசெய்யும் போது மற்றையோர்



சைமன்டோவ்பல்

ஒவ்வொருவரும் நிபுணர்களாகி விடுகின்றனர் என்கிறார் 33 வயதான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சைமன்டோவ்பல்.

நடுவரின் பணி மகத்தானது என்றாலும் அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்றும், நடுவர்களிடம் எதிர் பாராத ஆற்றல் இருப்பதால் சிலரை நடுவர் பதவிக்கு இட்டுச் செல்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் இந்நடுவர்களின் சேவையில் கணிசமாகப் பங்களிக்கும் வகையில் ஐ.சி.சி கிண்ணப் போட்டிகளில் புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றும் அவர் கூறுகின்றார்.

பெரும்பாலான உலக நாடுகள் பங்கேற்கும் இந்தப் போட்டியில் விக்கெட்டில் 'மைக்' இணைக்கப்பட்டமையும் 3ஆவது நடுவருக்கு ஒலிவாங்கி வழங்கியிருப்பதும் Noball தீர்ப்புக்கு உதவியளிக்கிறது.

ஆயினும் கிரிக்கெட்டில் இந்தத் தொழில்நுட்பம் கையாளப்படுவது சரியானதோ, தவறானதோ எனச் சொல்ல முடியாது. நான் இதற்கு எதிராளி அல்ல. ஆயினும் இதில் எச்சரிக்கையாக இருக்கிறேன்" என்றும், இந்தத் தொழில்நுட்பம் நடுவர் ஒருவரின் பணியை செய்தாலும் எனது திறமையை நான் வெளிக்காட்டியே இருக்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கும் மேலாக சில அணிகளுக்கு எதிரான நடுவர்களின் தீர்ப்பு பாதகமாக அமைந்துவிட்டது என்பதை தொழில் நுட்பத்தின் உதவியுடன் அறியும் போது வேதனையாகவே உள்ளது என்றும் ஆட்டமிழக்காத ஒரு வீரரை ஆட்டமிழந்ததாக அறிவிக்கும் போது அவ் அணியை மீளமுடியாத கட்டத்துக்கு இட்டுச் சென்று விடுகிறது. அப்போது நடுவர் தொடர்பில் சர்ச்சைகள் தொடரும் ஆனாலும் நடுவரின் பணி அச்சந்தர்ப்பத்தில் கடினமான ஒன்றாகவே இருக்கும் என்பதையாவரும்



அறிந்திருக்கின்ற போதும் அவர் மீது இரக்கம் காட்டமுன்வரமாட்டார்கள் என்பது இன்றும் தொடர்வதாகவே உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரூபாவின் பெறுமதி மோசமாகக் குறைவடைந்து நாடு பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கும்!

## மத்திய வங்கி அறிக்கையில் தகவல்

இலங்கையில் ஒகஸ்ட் நடுப்பகுதியில் எண்ணெய் விலை பெரலானது 50 டொலர்களை அண்மித்ததால், பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்ததனால் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை மேலும் மோசமாகப் பாதித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வருடாந்த எரிபொருள் இறக்குமதிச் செலவீனம் 850- 900 மில்லியன் டொலர்களிலிருந்து 1200 - 1300 மில்லியன் டொலர் வரை அதிகரிக்குமெனவும், குறிப்பாக 40 சதவீதத்தால் உயர்வடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் எரிபொருள் விலையேற்றத்தால் அதிகளவு டொலர் பணம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அதே சமயம் டொலரின் பெறுமதியும் அதிகரித்திருக்கிறது. இதனால் இலங்கை ரூபாவின் பெறுமதி மோசமாகக் குறைவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளதெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த 7 மாதங்களில் 7 சத வீதத்தால் ரூபா மதிப்பிறக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் இறக்குமதிப் பொருட்களுக்கு அதிக தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது. மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் வர்த்தக நிலுவை 1 126 மில்லியன் ரூபாவால் இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப் பகுதியில் அதிகரித்துள்ளது. 2003 இல் இதே 6 மாத காலப்பகுதியில் 700 மில்லியன் டொலர்களாலேயே அதிகரித்தது. சென்மதி நிலுவைப் பற்றாக்குறை 300 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. ஒகஸ்டில் பெற்றோல் விலை இரு தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. காஸ் விலையும் இரு தடவைகள் கடந்த மாதம் உயர்த்தப்பட்டது. பிரதான உணவுப் பொருளான அரிசியின் விலை கடந்த 4 மாதங்களில் 16 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. சம்பா அரிசி கிலோ 52 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. பால்மா விலைகள் 6 சத வீதத்தால் உயர்ந்துள்ளன. செப்ரெம்பர் தொடக்கம் பஸ் கட்டணங்கள் 12.5 - 16 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையும் கட்டணத்தை உயர்த்துவதற்கான கோரிக்கையை விடுத்திருக்கிறது. இதேவேளை, மானியத்தைக் குறைக்குமாறு பெரிய வர்த்தக அமைப்புகள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றன. சர்வதேச சந்தை விலைக்கேற்ப பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களின் விலையைச் சீர்ப்படுத்துமாறு இலங்கை வர்த்தக சம்மேளனம் அராசங்கத்தைக் கோரியுள்ளது. வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் இடைவெளி அதிகரித்தால், வட்டி வீதம் மோசமாக அதிகரிக்குமென வர்த்தக சமூகம் எச்சரித்துள்ளது.

# 1987இல் மக்களிடம் பறித்த அ.அட்டைகளை ஜே.வி.பி.யினர் திருப்பி ஒப்படைக்க வேண்டும்

## பா.உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டு வரும் பழிவாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்து தாம் சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்லவுள்ளதாக நேற்றுமுன்தினம் கொழும்பில் நடை பெற்ற ஊடக மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கம் நாட்டில் பொருட்களின் விலையுயர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய திட்டங்களைச் செயற்படுத்துவதில் இருந்து விலகி மக்களைத் திசை திருப்புவதற்காக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறது. அத்துடன் அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி அரசியல் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வர சூழ்ச்சி செய்கிறது எனக்கூறிய அவர், இன்று அரசாங்கக் கட்சியாக உள்ள ஜே.வி.பி அன்று 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்களிடம் இருந்து பறித்துச் சென்ற அடையாள அடடைகளை மீண்டும் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (32)

# கண்டியில் வெடிவிபத்து ஒருவர் பலி; இருவர் காயம்

(கொழும்பு)

கண்டி பலகல்ல கைத்தொழிற் பேட்டையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வெடி விபத்துச் சம்பவமொன்றில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் இருவர் காயமடைந்த நிலையில் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கைத்தொழிற் பேட்டையிலுள்ள தொழிற்சாலையொன்றில் எரிபொருள் கொள்கலன் ஒன்று திருத்தப்பட்டுக் கொண்டிருந்த சமயமே இந்த வெடி விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவம் குறித்து பேராதனைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# தென்பகுதியில் வெள்ள அபாயம் ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தின் பல பாகங்களில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக அங்கு வெள்ளப் பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறியவருகிறது.

களுத்துறை மாவட்டம் பாலிந்த நுவர பிரதேசசபைப்பிரிவில் 10 ஆயிரம் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் களுத்துறை இரத்தினபுரி வீதியில் பல இடங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. மத்துகம-கலவான பிரதான பாதை வெள்ளத்தால் மூடிப் போக்குவரத்துத் தடை ஏற்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களினூடாகப் பாயும் ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால், மேலும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# பெருமளவு சட்ட விரோத குடியேறிகள் இத்தாலிய கடற்படையினரால் கைது

## விரைவில் சொந்த நாடுகளுக்குத் திரும்புவர்

பிரிட்டன் நோக்கி படகொன்றில் சென்று கொண்டிருந்த பெருமளவு சட்டவிரோத குடியேற்றக்காரர்களை இத்தாலிய கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இத்தாலிய கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்களில் பெருமளவானோர் இலங்கையர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இலங்கை,இந்தியா, பாகிஸ்தான். பங்களாதேஷ் மற்றும் ஈராக், சூடான், எதியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரிட்டனுக்குச் சட்டவிரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிக் கொண்டு சென்ற குறிப்பிட்டபெரிய மீன்பிடிப்படகு பழுதடைந்த நிலையில் திருத்த வேலைகளுக்காக இத்தாலியக் கரையை நோக்கிச் சென்றபோதே கடற்படையினர் அதனை வழிமறித்துசோதனையிட்டு, சட்டவிரோத குடியேற்றவாசிகள் அனைவரையும் கைது செய்துள்ளனர்.

இத்தாலியிலுள்ள தடுப்பு முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள். அனைவரும் விரைவில் அவர்களின் சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.


# வட.இ.ச.சபைப் பரீட்சைகள் 2005

**வட.இ.ச.சபையின் 2005ஆம் ஆண்டிற்கான விண்ணப்பப்படிவங்கள் 2004.09.20 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத்திகதி 2004.12.01. விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை, அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா முப்பது (30/=) மட்டும். விண்ணப்பப்படிவத்தைத் தபால் மூலம் பெறவிரும்புவோர் ரூபா 30/= பெறுமதியான காசுக்கட்டளை (மணிஓடர்) உடன் 4.50 பெறுமதியான தபால் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள்(10செ.மீ, 22செ.மீ) கடித உறையை வட.இ.ச.சபைக் காரியாலயத்திற்கு அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.**

01)கொழும்பு
திருமதி.சி.தவமணிதாசன் (ஆசிரியர்)
விவேகானந்தா மகாவித்தியாலயம்.
புதுச்செட்டித்தெரு,
கொழும்பு-13.
தொலைபேசி.இல-012-431120
இல்லம்-17, கனல் வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06,
தொலைபேசி இல.012-364548.

02) திருகோணமலை
திருமதி.தே.முருகுப்பிள்ளை,
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (சங்கீதம்)
வலயக்கல்விப்பணிமனை,
திருகோணமலை.

03) மட்டக்களப்பு
செல்வி.ந.நடராசா,
உதவிக்கல்விப்பணிப்பாளர் (சங்கீதம்),
வலயக்கல்விப்பணிமனை,
மட்டக்களப்பு.

04)கல்முனை
திருமதி.த.விசுவநாதன்,
ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்),
கல்முனைக்கல்வி வலயம்,
கல்முனை.

05) வவுனியா
திரு.வீ.கணேசராஜா,
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
வவுனியா தெற்குக் கல்விக்கோட்டம்,
வவுனியா.
தொலைபேசி.இல-
அலுவலகம்:-024-2222373
இல்லம்:-024-22220684.

06)முல்லைத்தீவு
திரு.எஸ்.குருகுலராஜா,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்விப்பணிமனை,
முல்லைத்தீவு.

07) கிளிநொச்சி
திரு.ப.அரியரத்தினம்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்விப்பணிமனை,
கிளிநொச்சி.

08) மன்னார்
கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்விப்பணிமனை,
மன்னார்.

09) கண்டி
திருமதி.வையந்திமாலா செல்வரத்தினம்
(ஆசிரியர்)
கண்டி உயர் கல்லூரி,
கண்டி.

(சி-10403)


# பாதாள உலகக் குழுவினரிடையே மோதல் ஒரே குடும்பத்தின் 28ஆவது நபரும் கொலை!

(கொழும்பு)

கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் பாதாள உலகக் கோஷ்டிகளிடையே இடம்பெறும் மோதல்களின் தொடர்ச்சியாகக் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தின் 28ஆவது நபரும் கொல்லப்பட்டுள்ளார்.

பொறள்ளை சின்னத்துப 13ஆவது தோட்டத்தில் சனிக்கிழமை இரவு 7.40 மணியளவில் இடம்பெற்ற இந்தத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கடந்த 12ஆம் திகதி கொழும்பு ஹோட்டன் பிளேஸில் சுட்டுக்கொல்லப்பட்ட பிரபல பாதாள உலகக்குழுத் தலைவர் ஜிப்போவின்(விஜேந்திர பீற்றர்), சிறிய தந்தையான பிச்சைமுனியாண்டி தியாகராஜா (நீல்-50வயது) என்பவரே உயிரிழந்தவராவார்.

பாதாள உலகக் குழுக்களிடையே தொடர்ச்சியாக நடைபெறும் மோதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 28 ஆவது நபர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

# சுகாதார திணைக்களப் பணியாளர் அலரி மாளிகை வரை பாதயாத்திரை

சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றும் அமய, தற்காலிக ஊழியர்களின் சம்பள முரண்பாடு அமைச்சர் வாக்குறுதியளித்தபடி செப்ரெம்பர் 1ஆம் திகதிக்கு முன் தீர்க்கப்படாததையடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து மேற்படி ஊழியர்கள் அலரிமாளிகைவரை பாதயாத்திரை செய்ய முடிவு செய்துள்ளதாக, அகில இலங்கை சுகாதாரசேவை தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியர்களினதும் ஏனைய ஊழியர்களினதும் சம்பள முரண்பாடு தீர்க்கப்பட்டு சிற்றூழியர்களாகப் பணியாற்றுவோரின் பிரச்சினை கடந்த 1ஆம் திகதிக்கு முன்பு தீர்க்கப்படும் எனச் சுகாதார அமைச்சர் வாக்குறுதியளித்தும், இது வரை பலன் ஏதுமில்லாத நிலையில் இந்த முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று இதற்கான சரியான முடிவு வழங்கவில்லையாயின் நாளை மேற்படி பாதயாத்திரை நடைபெறும் எனக்கூறப்படுகிறது.

## துரித நடவடிக்கை

சிறிலங்காவின் எந்தப் பகுதியிலும் பொலிசாரினால் கைது செய்யப்படும் ஒரு நபரைப் பற்றிய முழு விபரங்களை 24 மணித்தியாலங்களுக்குள் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பகுதிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இவை ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரனையுடன் இயங்கும் எனவும் 'தினமின' செய்தி வெளியிட்டுள்ளது.

# சர்வதேச பிணக்குகளில் அமெ-இந்தியா இடையில் பொதுவான கண்ணோட்டத்தை உருவாக்க முயற்சிப்பேன்

## இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்

(புதுடில்லி)

**பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்குமிடையேயுள்ள உறவைப் பலப்படுத்த உறுதி பூண்டுள்ளோம். இரு நாடுகளுக்கும் தொடர்புள்ள சர்வதேச பிரச்சினைகள் பற்றி விவாதிக்கவும், அணுகு முறைகளில் இரு நாடுகளிடையே பொதுவான கண்ணோட்டத்தை உருவாக்கவும் இந்தியா முயற்சிக்கும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் பிற்பகல் டில்லியில் இருந்து நியூயோர்க்குக்கு தனி விமானத்தில் புறப்பட்டார். வீட்டில் இருந்து டெல்லி விமான நிலையத்திற்கு உலங்கு வானூர்தியில் புறப்பட்ட அவரை காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, பிரணாப் முகர்ஜி, அர்ஜுன்சிங், ராமம் விலாஸ்பஸ்வான், ஜெய்ப் பால்ரெட்டி, குழாம் நபி ஆசாத் உட்பட மத்திய அமைச்சர்கள் டில்லி முதல்வர் ஷீலாதீட்சித், எம்.பிக்கள், முப்படைத் தளபதிகள் வழியனுப்பி வைத்தனர். டில்லி இருந்து புறப்படும் முன் மன்மோகன் சிங் பேட்டியளித்தார். அப்போது அவர் மேலும் கூறியதாவது;

திங்கட்கிழமை இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இறங்குகின்றேன். அப்போது இங்கிலாந்துப் பிரதமர் டோனிபிளேர் அளிக்கும் மதிய விருந்தில் கலந்துகொண்டு அவருடன் பேசுகிறேன். இந்தியா-இங்கிலாந்து இடையேயுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பலமான உறவை மேலும் திடப்படுத்த அப்போது பிளேயருடன் ஆலோசனை நடத்துவேன். எங்களது பேச்சுவார்த்தை முடிவில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்படும். இரு நாடுகளிடையே உள்ள உறவைப் பலப்படுத்த நாங்கள் கொண்டுள்ள உறுதி அதில் எதிரொலிக்கும். இந்தியாவில் உள்ள தொழில்வாய்ப்புக்களில் இங்கிலாந்து பங்கெடுக்க வேண்டும் என பிரதமர் பிளேயரிடம் கேட்டுக் கொள்வேன். இங்கிலாந்திலுள்ள தொழில் நிறுவனங்களின் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவேன்.

செவ்வாய்க்கிழமை காலை நியூயோர்க்கில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சுடன் காலைச் சிற்றுண்டி அருந்துகிறேன். பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் இரு நாடுகளிடையேயும் உள்ள உறவைப் பலப்படுத்த இரு நாடுகளும் உறுதி பூண்டுள்ளன. இரு நாடுகளுக்கும் தொடர்புள்ள சர்வதேசப் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கவும் அணுகு முறைகளில் இரு நாடுகளிற்குமிடையே பொதுவான கண்ணோட்டத்தை உருவாக்கவும் இந்தச் சந்திப்பு வாய்ப்பளிக்கும் என்று நம்புகிறேன். மிகப்பெரிய பொருளாதார ஒத்துழைப்புக்கு வழி செய்யும் வகையில் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல இந்தியா தயாராகவிருக்கிறது என்பதை இந்த அமெரிக்கப் பயணத்தின் மூலம் தெரிவிப்பேன். பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை 24ஆம் திகதி சந்திக்கிறேன். இந்தியா- பாகிஸ்தான் இடையே தற்போது நடைபெற்று வரும் சமரசப் பேச்சுவார்த்தைக்கு அடுத்த நடவடிக்கையாக இந்தச் சந்திப்பு அமையும். பல்வேறு நாட்டுத்தலைவர்களையும் நியூயோர்க்கில் சந்தித்துப் பேசுகிறேன்.


ஐக்கிய நாடுகள் சபை அமைப்பில் சீர்திருத்தம் செய்வதற்கும், பாதுகாப்புக் கவுன்சிலை மாற்றியமைக்கவும் முன்னுரிமை அளிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவிபெற இந்தப் பயணத்தைப் பயன்படுத்திக்கொள்வேன். அதற்கு ஆதரவு பெருகிவருகிறது இவ்வாறு மன்மோகன் சிங் கூறினார்.

மன்மோகன் சிங் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 23ஆம் திகதி உரையாற்றுகிறார். நேரம் கிடைக்கும் போது ரஷ்ய அதிபர் புட்டின் உட்பட மற்ற நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப்பேசுகிறார். அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு 26ஆம் திகதி சுவிஸ் சர்லாந்திலுள்ள ஜெனிபா செல்கிறார். 9ஆம்நாள் பயணத்தை முடித்துக்கொண்டு 27ஆம் திகதி டில்லி திரும்புகிறார்.

### பின்னிணைப்பு

(புதுடில்லி)

கார்க்கில் ஆய்வுக்குழு அறிக்கையின் 18 பின்னிணைப்புக்களை பொது மக்கள் அறியும் வகையில் வெளியிட மத்தியரசு முடிவெடுத்துள்ளது.




*அமெரிக்கா புறப்பட்ட பிரதமர் மன்மோகன்சிங்கை காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி, பாதுகாப்பு அமைச்சர் பிரனாப் முகர்ஜி டில்லியில் வழியனுப்பிவைத்தபோது எடுத்தபடம்.*

## உமா பாரதியின் சாடல் குறித்து காங்.தலைவர் கடும் கண்டனம்

பா.ஜ.க. மூத்த தலைவர் உமாபாரதி மேற்கொண்டுள்ள மூவர்ணக் கொடி யாத்திரையில் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் அமைச்சர்களைத் தாக்கிப் பேசி வருவதற்கு மூத்த காங்கிரஸ் தலைவரும், மத்திய பிரதேச முன்னாள் முதல்வருமான திக்விஜய்சிங் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தூரில் செய்தியாளர்களிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் கூறியது, தேசியக் கொடியைக் காப்பதாகக் கூறிக்கொண்டு யாத்திரை மேற்கொண்டுள்ளார் உமாபாரதி ஆனால் அவரது கட்சித் தொண்டர்களே ரயில் பயணத்தின் போது தேசியக்கொடியின் மீது சீட்டு வைத்து விளையாடுகின்றனர். இது தேசியக்கொடிக்கு அவர்கள் செய்யும் அவமரியாதையாகும். தேசியக்கொடியையும், முன்நிறுத்தி யாத்திரைகொள்ளாமல் காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் மன்மோகன், ராகுல்காந்தி என வரிசையாக காங்கிரஸ் கூட்டணித் தலைவர்களை விமர்சித்து வருகின்றனர் என்றார்.



*உத்தரப்பிரதேச மாநிலம் ரேபரேலி மக்களவைத் தொகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றகூட்டத்தில் பொதுமக்களின் குறைகளைக் கவனமாகக் கேட்கிறார் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி.*

## சோனியாவைச் சமாதானப்படுத்த ஜெயலலிதா பகீரதப் பிரயத்தனம்

முதன்மந்திரி ஜெயலலிதாவின் டில்லிப் பயணம் தோல்வி அடைந்ததால் அவர் விரக்தியுடன் சென்னை திரும்பியுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மக்களவைத் தேர்தலுக்கு முன் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை ஜெயலலிதா மிகவும் கடுமையாக தாக்கிப் பேசியதுடன் டில்லியில் நிருபர்கள்கூட்டத்தைக் கூட்டி சோனியாவை மீண்டும் மீண்டும் தனிப்பட்ட முறையில் கடுமையாகத் தாக்கிப் பேட்டியளித்தார். வாஜ்பாயைத் திருப்பதிப்படுத்தும் வகையில் பாரதீய சனதாக்கட்சி மேலிடத் தலைவர்களின் யோசனையின் பேரில் அவர் இவ்வாறு தாக்கியதாகக் கூறப்பட்டது.

ஆனால் அதற்கு மாறாக மத்திய காங்கிரஸ் ஆட்சியமைத்தது. ஜெயலலிதாவிற்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டதும் தனது ஆட்சிக்கு எப்போது வேண்டுமானாலும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் ஜெயலலிதாவை ஆட்டிப்படைத்து வருகிறது. சோனியாவைச் சமாதானப்படுத்தினால் தான் ஆட்சியைத் தக்கவைக்க முடியும் என்று ஜெயலலிதாவிற்கு நண்பர் ஒருவர் யோசனை கூறினாராம். இதனால் எப்படியாவது சோனியாவைச் சமாதானப்படுத்த முடிவு செய்தார். இதற்காக அவர் டெல்லியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் வட இந்திய முக்கிய தலைவர்கள் சிலரை அணுகித் தனக்கும் சோனியாவிற்கும் இடையே சமரசம்செய்யுமாறும், சோனியையைச் சந்திக்க நேரம் வாங்கித் தருமாறும் கெஞ்சினாராம். சோனியாவை இப்போது சமாதானப்படுத்த முடியாது. அவர் மிகவும் கோபமாக இருக்கிறார். எனவே சந்திப்பதற்கு நேரம்பெற இயலாது என்று அந்தத்தலைவர்கள் கைவிரித்து விட்டார்களாம்.

இந்த நிலையில் ஜெயலலிதாவுக்கு அவரது பழைய நண்பரான உயர்ந்த பதவி வகித்தவர் ஜெயலலிதாவுக்கு ஐடியா கொடுத்தாராம் டில்லிக்குச் சென்று பேட்டி தருமாறும் அப்போது சோனியாவை நான் தனிப்பட்ட முறையில் தாக்கவில்லை என்றும் பாரதீய ஜனதாவுடன் உறவு இல்லை என்றும் பகிரங்கமாக அறிவிக்குமாறும், யோசனை தெரிவிக்கப்பட்ட தாம் மிகுந்த தயக்கத்துடன் அதை ஜெயலலிதா ஏற்றுக் கொண்டாராம் அதன்படி அவர் டில்லியில் தந்தபேட்டியில் சோனியாவைத் தனிப்பட்டமுறையில் தாக்கவில்லை. என்று அறிவித்தாராம் தமிழக அரசு அதிகாரிகள் தான் இந்தப்பேட்டிக்கு ஏற்பாடு செய்தனர் இதனையடுத்தும் சோனியாவையும் சமாதானப்படுத்த முடியவில்லை. பிரதமரும் எந்த சைகையும் தரவில்லை என்று விரக்தியடைந்த ஜெயலலிதாவின் டில்லிப்பயணம் தோல்வியில் முடிந்த மனவேதனையுடன் சென்னை திரும்பினார்.

## மதுரையிலிருந்து டில்லிக்கு அதிவேக தொடருந்து சேவை

"விமானங்களில் இருப்பதுபோல் தொடருந்துகளில் கழிப்பிடவசதி அளிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மதுரை-இராமேஸ்வரம் அகல தொடருந்துப் பாதை அமைக்கும் போது இராமேஸ்வரம் கடலில் அமைந்துள்ள பாம்பன் தொடருந்துப் பாலத்தையும், கடலில் அமைந்துள்ள பாம்பன் தொடருந்து பாலத்தையும் அகல தொடருந்துப் பாதையாக்க வேண்டுமா? அல்லது புதிதாக அகல தொடருந்துப் பாதையமைக்க வேண்டுமா? என்பது குறித்து ஆலோசனை செய்யப்படும். எவ்வளவு செலவானாலும் இராமேஸ்வரம் வரை அகல தொடருந்துப் பாதை நிச்சயம் அமைக்கப்படும் இவ்வாறு லல்லு கூறினார்.



மதுரை-டில்லி புதிய அதிவேக தொடருந்துத் தொடக்க விழாவில் பங்கேற்ற மத்திய தொடருந்து அமைச்சர் லாலு பேசும் போது முதன்மந்திரி ஜெயலலிதாவின் டில்லிப் பயணத்தைச் சிரித்துக்கொண்டே விமர்சனம் செய்த அவர் கூறியதாவது,

நானும் என் மனைவி பீகார் முதல்வர் ரப்ரிடி தேவியும் ஒன்பது குழந்தைகளுடன் தமிழகம் வந்துள்ளோம். நாங்கள் தமிழகத்தில் காலடி வைக்கும் போது இங்குள்ள முதல்வர் ஜெயலலிதா டில்லிக்குச் சென்றுவிட்டார். இவ்வாறு அவர் கூறியதும் விழாவில் பலத்த சிரிப்பு சிரிப்பொலி எழுந்தது. இந்த விழா அழைப்பிதழில் இடம்பெற்றிருந்த தமிழகப் போக்குவரத்து மந்திரி விசுவநாதன், அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் விழாவுக்கு வராமல் புறக்கணித்தனர் என்றார்.



*காஷ்மீர் எல்லையில் ஊடுருவியபோது சுட்டுக்கொல்லப்பட்ட 5 தீவிரவாதிகளின் உடல்களைச்சுற்றி இந்திய இராணுவத்தினர் இருப்பதைக் காணலாம்.*

## முதலாவது ஐ.சி.சி அரையிறுதிப்போட்டியில்
## இங்கிலாந்து – அவுஸ்.இன்று பலப் பரீட்சை

ஐ.சி.சி கிண்ணத்திற்கான மிக முக்கியமான அரையிறுதிப்போட்டியொன்று இன்று நடைபெறவுள்ளது. 4ஆவது மினி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் கடந்த 10 ஆம் திகதி தொடங்கி நடந்து வருகிறது. இந்தப் போட்டியின் 'லீக்' ஆட்டங்கள் நேற்று முன்தினத்துடன் முடிந்தன. மொத்தம் 12 அணிகள் பங்கேற்றதில் 4 அணிகள் தங்கள் பிரிவில் முதலிடம் பிடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. இந்தப் போட்டிக்கு நேற்று ஓய்வு நாளாகும். இன்று நடைபெறும் முதல் அரையிறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளும், நாளை நடைபெறும் 2ஆவது அரையிறுதியில் மேற்கிந்தியத்தீவு - பாகிஸ்தான் அணிகளும் மோதுகின்றன. இதில் வெற்றிபெறும் அணிகள் 25 ஆம் திகதி இறுதிப் போட்டியில் மோதும். இம்முறை அரையிறுதியில் மோதும் நான்கு அணிகளில் மேற்கிந்தியத்தீவைத் தவிர ஏனைய அணிகள் மினி உலகக் கோப்பை இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாதவை. 1998 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவு இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

## அவுஸ்.அணியைத் தோற்கடித்து பழிக்குப் பழிவாங்குவோம்—வோன்

அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை வெல்வோமென்று நம்பிக்கை தெரிவிக்கிறார் இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கல்வோன். மினி உலகக் கோப்பை கிரிக்கெட், எதிர்பார்ப்பைத் தூண்டும் அடுத்த சுற்றுக்குள் நுழைந்திருக்கிறது. இன்று நடக்கும் முதல் அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. இதில் வெற்றிபெற்றால் மினி உலகக் கோப்பை வரலாற்றில் முதன் முறையாக இறுதிப்போட்டிக்கு அவுஸ்திரேலியா தகுதி பெற முடியும். ஆனால் 'அப்படி நடக்காது. வெல்லப்போவது நாங்களே' என்கிறார் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல்வோன்.

அவுஸ்திரேலிய அணியை இம்முறை தோற்கடித்தே தீர வேண்டும் என்று அவர் சபதம் போட்டிருக்கிறார். அதற்குக் காரணமும் இருக்கிறது. இவ்விரு அணிகள் கடைசியாக மோதிக்கொண்ட 14 போட்டிகளில் .... பதினான்கையும் வென்றுள்ளது அவுஸ்திரேலியா ஒரு போட்டி கூட தாக்குப்பிடிக்க முடியவில்லை இங்கிலாந்திற்கு அந்தக் கோபம் வோன் மனதில் இருக்கிறது.

முக்கியமான அரையிறுதிப் போட்டியில் ஆஸி.யை பழிக்குப் பழிவாங்க அவர் காத்திருக்கிறார்.

'அவுஸ்திரேலியா உலகின் மிகச்சிறந்த அணி பலமான நியூசிலாந்து அணியை வென்று சாதாரணமாக அரையிறுதிக்கு முன்னேறியது. அவர்களுக்கு எதிரான போட்டிக்காக காத்திருக்கின்றோம். எங்கள் அணியில் சில வீரர்கள் ஆஸி.க்கு எதிராக இப்போதுதான் முதல் முறையாக விளையாடப் போகிறார்கள். நம்பிக்கையுடன் களமிறங்குகிறோம். கடந்த காலங்களில் சந்தித்த தோல்விகளுக்கு இப்போது முற்றுப்புள்ளி வைப்போம்' என்கிறார் வோன்.




### இந்தியாவுக்கு 138 ஆவது இடம்

சர்வதேச கால்பந்து தரவரிசைப் பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. சமீபத்தில் நடந்த உலககோப்பை தகுதிச் சுற்றில் இந்திய அணி மோசமான முடிவை எதிர்கொண்ட போதும் தரவரிசையில் இந்தியாவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் 142ஆவது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 138ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறது. ஒட்டு மொத்தமாக இந்திய அணிக்கு 335 புள்ளிகள் கிடைத்துள்ளன. இலங்கை அணி 143ஆவது இடத்திலும், வங்களாதேசம் 158 ஆவது இடத்திலும் நீடிக்கின்றன.

## சிம்பாப்வே செல்லும் இங்கிலாந்து அணியிலிருந்து வேகப்பந்து வீச்சாளர் ஹாா்மிசன் விலகினார்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீவ் ஹார்மிசன் சிம்பாப்வே செல்லும் இங்கிலாந்து அணியுடன் தான் இணைந்து கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். கடந்த 17 ஆம் திகதி சிறிலங்காவுடனான ஐ.சி.சி லீக் போட்டிக்குப்பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார். இது 18 மாதங்களுக்கு முன்பு தான் எடுத்த முடிவு என்று கூறியுள்ள அவர், உலகக்கிண்ண அணியினர் கடந்த சில தினங்களாக தீர ஆலோசித்து எடுத்த இறுதி முடிவு என்றார்.

எதிர்வரும் நவம்பர் 26 ஆம் திகதி ஆரம்பமாகும் முதலாவது ஒரு நாள் போட்டி உட்பட 5 ஒரு நாள் போட்டிகளில் இங்கிலாந்து அணி பங்கேற்கவிருந்தது. இவரின் முடிவு ஏனைய வீரர்களையும் தூண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த யூலை மாதம் 7 வீரர்கள் மேற்படி சுற்றுப பயணம் வேண்டாம் எனக் கூறினர். எனினும் இவர்களுக்கெதிராக இங்கிலாந்து கிரிக்கெட் சபை எதுவித நடவடிக்கையும் எடுக்காது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தனது தனிப்பட்ட முடிவு என்றாலும் அங்கு போகாமல் இருப்பது நான் மட்டுமாக இருக்க முடியாது. அதைப்பற்றி தன்னைக் கேள்வி கேட்க மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரின் இந்த முடிவை சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் வீரர் ஹென்றி ஒலங்கா வரவேற்றிருக்கிறார். அவரின் இந்த முடிவுக்கு தலை வணங்குவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

ஒலங்கா கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியின் போது சிம்பாவேயின் முகாபே அரசுக்கு எதிராக கறுப்புப் பட்டியணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்.



இதற்கு முன்பு அவுஸ்திரேலிய வீரர் ஸ்ருவட் மக்கில் என்பவரும் சிம்பாப்வே சுற்றுப் பயணத்திற்கு மறுப்புத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

### ஒரே நாளில் 05 சாதனை

பாராவம்பிக் நீச்சல் போட்டியில் ஒரேநாளில் ஐந்து உலகசாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

கிரீஸ் தலைநகர் எதென்சில் ஊனமுற்றோருக்கான பாராலிம்பிக் போட்டி நடக்கிறது இதில் நீச்சல் போட்டிகளில் 594 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இவர்கள் ஊனத்தின் தன்மையின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் நடந்த தகுதிச் சுற்றுப் போட்டிகளில் சாதனைகள் மேல் சாதனைகள் படைக்கப்பட்டன.

## சர்வதேச தடகளம் அஞ்சுவுக்கு நான்காவது இடம்

ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் பதக்க நம்பிக்கையை தக்க வைத்திருந்த அஞ்சுஜோர்ஜ் கடைசியில் 6ஆவது இடத்தை மட்டுமே எட்டினார். ஒலிம்பிக் போட்டி முடிந்த கையோடு வெளிநாட்டில் நடக்கும் மற்றமோதல்களில் அவர் கலந்து கொண்டு வருகிறார். மொனாக்கோ நாட்டில் நடந்த போட்டியில் பங்கேற்ற அஞ்சு நான்காவது இடத்தை எட்டி பதக்கத்தைக் கோட்டைவிட்டார். ஒலிம்பிக் போட்டியில் முதல் மூன்று இடத்தை எட்டிய அதே மூன்று ரஷ்ய வீராங்கனைகள் இந்தப் போட்டியிலும் வெற்றிபெற்றனர். அஞ்சு 6.61மீ தாண்டி நான்காவது இடத்திற்குத் தள்ளப்பட்டார். நடந்து முடிந்த ஒலிம்பிக் விளையாட்டில் அவர் 6.83 மீ தாண்டி புதிய தேசிய சாதனையைப் படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## போட்டியின் போது சுகவீனமுற்ற வீரருக்கு யாழ். கராத்தே சம்மேளனம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் பங்குபற்றி சுகவீனமுற்ற இளைஞரின் குடும்பத்திற்கு யாழ். கராத்தே சம்மேளனத்தினர் ஒரு தொகைப் பணத்தினை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் நடைபெற்ற குத்துச்சண்டைப்போட்டியில் பங்குபற்றிப் போட்டியின் போது மேடையிலிருந்து கீழே விழுந்ததில் தலையில் அடிபட்டு ஒரு மாதகாலமாக கோமாநிலையில் இருந்து வரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞரின் குடும்பத்தினருக்கு உதவிக் கொடுப்பனவாக யாழ்.மாவட்ட கராத்தே சம்மேளத்தினர் ஒருதொகைப் பணத்தினை அன்பளிப்புச் செய்துள்ளனர். இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் தூயவன் அரச அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கராத்தே வீரர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வினைத் தொடர்ந்து நடைபெற்றது. இந்த நன்கொடையினை யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தலைவர் வழங்கினார். (ச)

## கராத்தே பயிற்சி பட்டறை நிறைவில் சிறப்புற நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களிலும் உள்ள கராத்தே வீராங்கனை ஒருங்கிணைந்து தமிழீழ விளையாட்டுத்துறையினர் இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடாத்தியுள்ளனர்.

இலங்கையின் கராத்தே தந்தை சீகான் பெனி ரொபேட் அவர்களும் அவரது மாணவனான எம்.ஜேயுரம்பதி அவர்களும் இணைந்து வழங்கிய இப் பயிற்சிப் பட்டறையினைத் தமிழீழ விளையாட்டுத்துறையின் கராத்தே சமேளனம் ஒழுங்கமைத்திருந்தது.

மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான மூன்றாவது சுற்றுப்போட்டிக்கான தயார்ப்படுத்தலாகவே இப்பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

இதில் மட்டு - அம்பாறை மாவட்டங்கள் உட்பட தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 200 இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

18.09.2004 ஆம் நாள் ஆரம்பமாகி 19.09.2004 ஆம் நாள் மாலை 7.00 மணிவரை நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றிய பயிற்சியாளர்களுக்கு நேற்றுத் தூயவன் அரசறிவியல் கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ்களை இலங்கையின் கராத்தே தந்தையான சீகான் பெனிரொபேட் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். (ச)

## பரபரப்பான கடினப்பந்து போட்டியில் கிளி.ம.விக்கு ஒரு விக்கெட் வெற்றி

பரபரப்பான கடினப்பந்துப் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி பலம்வாய்ந்த வவுனியா விபுலானந்த கல்லூரி அணியை ஒரு விக்கெட்டுக்களால் தோற்கடித்தது. நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இரண்டு பாடசாலைகளினதும் 16 வயதுப்பிரிவு அணிகள் கலந்து கொண்டிருந்தன.


நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கிளி.ம.வி.யின் அணித்தலைவர் க.அனுசன் வ/விபுலானந்தாக்கல்லூரியை துடுப்பெடுத்தாடப் பணித்தார். முதலில் துடுப் பெடுத்தாடிய அந்த அணி 20.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெ.விதுசாந் 19 ஓட்டங்களைப் பெற்றார்.



கிளி.ம.வி சார்பாக அணித்தலைவர் க.அனுசன் இரண்டு ஓவர்கள் பந்து வீசி மூன்று ஓட்டங்களை மட்டும் கொடுத்து 3 விக்கெட்டுக்களைச சாய்த்தார். சி.ஜெயசீலன், ப.ஜெசிதரன், வா.சஞ்சீவன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் க.சஞ்சீவன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றனர். இதில் இரண்டு ஓவர்கள் பந்து வசிய வா.சஞ்சீவன் இரண்டையும் ஓட்டமற்ற ஓவர்களாக வீசியே இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளி.ம.வி அணியினர் வ/விபுலானந்தா அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் தமது 9 விக்கெட்டுக்களையும் 42 ஓட்டங்களுக்குள் இழந்தனர். இந்நிலையில் 10ஆம், 11ஆம் இலக்க வீரர்களாக களம் இறங்கிய ப.ஜெசிதரன், சி.ரவிக்குமார் ஆகியோர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி தமக்குள் 53 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து வ/விபுலானந்தா கல்லூரியை அதிர்ச்சித் தோல்விக்குள்ளாக் கினர்.ப.ஜெசிதரன் 21 ஓட்டங் களையும், சி.ரவிக்குமார், 8 ஓட்டங்களையும் பெற்றனர். வ/விபுலானந்தக்கல்லூரி சார்பாக கி.கிரிசாந், அ.றோபேட் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## சிந்தனைக்கு



நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்; அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-09-2004



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com


## ஒப்புதல் வாக்குமூலமா?

"நாட்டின் பொருளாதாரத்துறையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலை பொருட்களின் விலையேற்றம் என்பன குறித்துத் தானும் எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களை நடத்தியிருக்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்கும்" என்ற சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கூற்றுக்கள் அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடா? அன்றி ஆட்சியில் தோல்வி அடைந்து விட்டதற்கான ஒப்புதல்வாக்கு மூலமா? அன்றி ஆளும் தரப்பிலுள்ள முரண்பாட்டின் வெளிப்பாடா?

நாட்டின் பொருளாதார நிலை மிக மோசமாகப்பாதிக்கப்பட்டு வரும் நிலையிலும் விலைவாசியேற்றமானது என்றுமில்லாதவாறு எகிறிச் செல்லும் நிலையிலும்- அரசாங்கத்தரப்பிலிருந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் எவையும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. மாறாக இன்றைய நிலையில் யார் ஆட்சியில் இருந்தாலும் விலைவாசி ஏற்றத்தை கட்டுப்படுத்த முடியாது என ஒரு அமைச்சர் கூறுவதும். நான் எதிர்க்கட்சியிலிருந்திருந்தால் போராட்டங்களை நடத்தியிருப்பேன் எனப் பிரதமர் கூறுவதும், பிரச்சினைக்குத் தீர்வாகிவிட முடியாது.

முன்னைய ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் மீது தற்போதைய ஆளும் ஐ.தே.முன்னணி முன்வைத்த பிரதான குற்றச்சாட்டுக்களில் முக்கியமானது விலைவாசி ஏற்றத்தைக்கட்டுப்படுத்த அது தவறிவிட்டது என்பதே இதனை அடிப்படையாகக் கொண்டு வீதியில் இறங்கிப் போராட்டங்களையும் நடாத்தியிருந்தது. அதுமாத்திரமல்லாது ஆட்சிக்கு வந்தபின்னர் ஐ.ம.சு முன்னணியின் முக்கிய பங்கு தாரிகளான ஜே.வி.பியினர் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தப்படாவிடில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவிடுவோம் என எச்சரித்ததும் உண்டு.

ஆனால் இன்று விலைவாசியானது, கட்டுக்கடங்காது எகிறிச் செல்கின்றது. அதிலும் குறிப்பாக அரிசி, மாவின் விலைகள் கூட அதிகரிக்கப்பட்டுள்ளன. சிறிலங்காவில் பாணின் விலையினை மூன்று ரூபாவால் தன்னிச்சையாகவே முதலாளிகள் அதிகரித்துவிட்டனர். அதுமட்டுமல்ல இன்னமும் விலைகள் அதிகரிகப்பதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உண்டு எனப் பரவலாக எச்சரிக்கவும் படுகின்றது. இவ்வாறான விலையேற்றத்திற்கு பெற்றோலியப் பொருட்களின் விலை சர்வதேச சந்தையில் என்றுமில்லாதவாறு அதிகரித்ததே காரணம் என அவர்களினால் விளக்கம் கூறப்படுகின்றது. அதாவது சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 50 டொலர் வரையில் அதிகரிப்பதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை பெற்றோலியப் பொருட்களின் விலையேற்றமானது அனைத்துப்பொருட்களின் விலைகளும் அதிகரிக்க வைக்கக் கூடியதொன்று என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் கடந்த காலங்களிலும் பெற்றோலியத்திற்கென அரசு மானியங்களை வழங்கி வந்தது என்பது உண்மையே. ஆனால் தற்பொழுது பெற்றோலியத்திற்கான மானியத்தை வழங்கத் திறை சேரியிடம் நிதியில்லை. கடந்தகாலங்களிலே பெற்றோலியத் துறைக்குப் பல மில்லியன் ரூபாக்களை கடனாகவும்செலுத்த வேண்டிய நிலையும் உள்ளது.

இந்த வகையில் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் பெற்றோலியப் பொருட்களின் விலை சர்வதேச சந்தையில் அதிகரித்த நிலையில் அவற்றின் விலைகளைக் குறைக்கவோ அன்றி கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவோ எவ்வாறு முடியும்? இந்நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலைகள் அதிகரிக்கப்படுவதைத்தவிர்க்க இயலாததென அறிவித்துவிட்டது. இந்நிலையில் இனியும் எரிபொருட்களின் விலை மேலும் அதிகரிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை பெற்றோலியப்பொருட்கள் விலை அதிகரிக்கப்பட்டு வருகின்றமைக்கு சர்வதேச சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் அதிகரிப்பே காரணமென ஆட்சியாளர்கள் கூறிக் கொண்டாலும்; எகிறிச்செல்லும் விலையினை மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளைத் தளர்வடையச் செய்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் பெற்றோலியப்பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் மாற்று நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இந்நிலையில்தான் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் நான் எதிர்க்கட்சியாக இருந்திருப்பின் போராட்டங்களை நடத்தியிருப்பேன் என்ற கூற்றுக்கள் வெளிவந்துள்ளது. ஆனால் இங்கு மக்கள் எதிர்பார்ப்பது அவர்களின் இத்தகைய ஒப்புதல் வாக்குமூலத்தையோ, பாவமன்னிப்புக்கோரிக்கையையோ அல்ல. மேலும் அரசாங்கத்தரப்பு கூறியிருப்பது போன்று விலைவாசி ஏற்றத்திற்கு பெற்றோலியப் பொருட்களின் விலையேற்றம் மட்டும் காரணமில்லை. அதற்கு அப்பால் இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதானப்பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்படுமா? என்ற கேள்வியும் காரணமாகும்.

இந்த வகையில் பார்க்கையில் இன்று விலைவாசி ஏற்றத்திற்கு சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐ.ம.சு.முன்னணி அரசாங்கமும் காரணமாகும். அதிலும் குறிப்பாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வரும் ஜே.வி.பி.யும் முக்கியமான காரணியாகும்.ஏனெனில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டிருந்தால் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளையும், விலைவாசி ஏற்றத்தையும் ஓரளவேனும் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் விலைவாசி மேலும் அதிகரித்தால் அரசாங்கத்தைவிட்டு வெளியேறுவோம் என்று கூறிய ஜே.வி.பி.யினர் இன்று இதனைக்கண்டு கொள்வதாக இல்லை. இதேவேளை பிரச்சினையைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரதமர் 'நான் எதிர்க்கட்சியாக இருந்தால் போராடியிருப்பேன்' எனக் கூறிப் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளப்பார்க்கிறார். அவ்வாறானால் அதிகாரமற்ற எதிர்க்கட்சியினரா பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும்?.

# அரச ஊழியருக்கு வரவு செலவுத்திட்டத்தில் திருப்தி தரக்கூடிய சம்பள உயர்வு கிடைக்கும்

### -திறைசேரி செயலாளர் ஜெயசுந்தர

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு எதிர் வரும் வரவு செலவுத் திட்டத்தில் திருப்தி தரக்கூடிய வகையில் வேதன உயர்வு வழங்கப்படவுள்ளதாக திறைசேரி செயலர் பி.பி ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். நாட்டில் இராணுவம் உட்பட்ட அரசாங்க ஊழியர்கள் சுமார் 8 இலட்சத்து50 ஆயிரம் பேர் சேவையில் உள்ளனர்அரசாங்கத்தின் வரவு செலவு திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இதில் இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் வேதன உயர்வு வழங்கப்பட வேண்டியது அவசியமாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே அரசாங்கத் துறையில் பல திணைக்கள ஊழியர்கள் தமது வேதன உயர்வைக் கோரிப் பேராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் அரசாங்க ஊழியர்களுக்கு 70 வீத வேதன உயர்வு வழங்கப்படும் என உறுதி வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

# அநுராதபுரத்தில் வங்கிக் கொள்ளை ஊழியர் ஒருவரின் கை வெட்டப்பட்டது

அநுராதபுரப் பேருந்து மையத்துக்கு முன்னால் அமைந்துள்ள அரசாங்க வங்கி ஒன்றினுள் ஆயுதங்களுடன் பிரவேசித்த குழுவினர் அங்கிருந்து நகைகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சமபவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது சம்பவத்தின் போது ஊழியர் ஒருவரின் கையை கொள்ளையர்கள் வெட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது கொளளையிடப்பட்ட பணம் 50 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது எனினும் கொள்ளையிடப்பட்ட நகைகளின் பெறுமதிமதிப்பிடப்படவில்லை.(32)

# முல்லேரியாவில் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

போதைப்பொருட்களுடன் பெண்ணொருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லேரியாவில் உள்ள இறப்பர் ஆலைச்சந்தியில் சொகுசு வீடொன்றைச் சோதனையிட்ட பொலிசார் நூறு பைக்கற்றுக்கள் பிறவுண்சுகர் போதைப்பொருட்களுடன் குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

கிராண்ட்பாஸ் பகுதியில் இப் போதைப்பொருட்களைக் கொள்வனவு செய்த இப் பெண் தனது குடும்ப உறுப்பினர்களிடையே அதை விற்பனை செய்வதற்காகவே வைத்திருந்தார் என முல்லேரியாப் பொலிசார் தெரிவித்துள்ளனா.

# பெரிய வெங்காய இறக்குமதிக்கு விரைவில் வரி அதிகரிப்பு

பெரிய வெங்காய இறக்குமதி தொடர்பிலான வரி அதிகரிப்பு விரைவில் அமுல் செய்யப்படவுள்ளது இந்தத் தகவலை விவசாய அமைச்சர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். நேற்று முதல் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி 10 ரூபாவால் உயர்த்தப்படுகிறது. இதற்கு நிதியமைச்சும் தமது ஒப்புதலை வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார் இலங்கையில் பெரிய வெங்காயம் தற்சமயம் ஒரு கிலோ 14 ரூபாவுக்கே விற்னை செய்யப்படுகிறது இதனைத் தவிர்த்துப் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 24 ரூபாவுக்கு விற்பனை செய்வதன் மூலம் உள்ளூர் வெங்காய உற்பத்தியாளர்கள் நன்மை பெறுவர் என்ற அடிப்படையிலேயே இந்த இறக்குமதி வரி உயர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளது. (32)

# தொலைபேசிக் கட்டணங்களை செலுத்தாத பா.உ.களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்தாத பாராளுமன்ற உறுப்பி னர்களை உடனடியாக அவற்றைச் செலுத்திவிடவேண்டும் என்றும் இல்லையேல் அவர்களுக்கான இணைப்புகள் துண்டிக்கப்படும் என்றும் ரெலிகொம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிட்டைத் தொகையை உடன் செலுத்த வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக ரெலிகொம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்துவதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டிற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் எனத் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம் ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

### -இராணுவத் தடையை மீறி

# கெருடாவில் இறங்குதுறைப் பகுதியை ஆழப்படுத்தும் பணி ஆரம்பம்

வடமராட்சி வடக்கின் கெருடாவில் கரையோரப் பகுதியிலுள்ள மீன்பிடி இறங்கு துறைகளை ஆழப்படுத்தும் பணியைப் படைத்தரப்பின் எதிர்ப்புக்களிற்கு மத்தியில் அப்பகுதி மீனவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 8 வருடங்களுக்கு மேலாக ஆழப்படுத்தப்படாதுள்ள இவ் இறங்குதுறைகளை ஆழப்படுத்துவது தொடர்பாக மீனவ சங்கங்களிற்கும் படைத்தரப்பிற்குமிடையே நிலவி வந்த இழுபறிகளால் இப்பணிகள் நீண்ட காலமாக இழுபறிப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இவ் இறங்குதுறைகளை ஆழப்படுத்துவதற்கான நிதியினை நிகொட் அமைப்பு யாழ் செயலகமூடாக தற்போது ஒதுக்கியுள்ளது. இதையடுத்து இறங்குதுறைகளை மனித வலு மூலம் ஆழப்படுத்தும் பணிகள் கெருடாவில் வல்வெட்டித்துறைப் பகுதிகளில் மீனவ சங்கங்களினால் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் கெருடாவில் பகுதியினில் கரையோரப்பாதுகாப்பு பணியிலிருந்த படையினர் இராணுவத் தலைமையகத்தினில் உரிய அனுமதியினைப் பெற்றிருக்கவில்லையெனக் கூறி இப் பணியினைத் தடுத்து நிறுத்த முற்பட்டுள்ளனர்.

ஆயினும் இதற்கெதிராக கிளர்ந்தெழுந்த மீனவர்கள் ஒன்று திரண்டு இறங்குதுறையினை ஆழப்படுத்தும் பணியினை முன்னெடுத்து வருகின்றனர்.

இதே வேளை அப்பகுதியினில் படையினர் நிறுத்தப்பட்டு இறங்கு துறைகளை ஆழப்படுத்தும் பணிகள் மேற்பார்வையிடப்படுதவதாக மீனவ சங்கங்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் ஆழப்படுத்தும் பணியில் பின்னர் அவர்கள் தலையிட்டிருக்கவில்லையெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றது. இதனிடையே போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகளும் இப் பணிகளை நேரில் பார்வையிட்டுள்ளனர்.

இறங்குதுறைப் பகுதிகளில் வளர்ந்துள்ள முருகைக்கற்களில் மோதுண்டு மீனவர்களின் மீன்பிடிப்படகுகள் பலவும் சேதமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

# உ. பா. வலயம் தொடர்பில் இரு வருடங்களில்

# எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை

## யாழ்-வெகுசன அமைப்புக்கள் குற்றச்சாட்டு



புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்களைக் கடந்துவிட்டபோதும் உயர்பாதுகாப்பு வலயம் எனும் விடயத்தில் எந்தவொரு முன்னேற்றமும் இதுவரை கண்டிருக்கப்படவில்லையென யாழ்.மாவட்ட வெகுஜனஅமைப்புக்கள் பலவும் குற்றம் சாட்டியுள்ளன. குறிப்பாக உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராயவென முன்னைய அரசினாலும் தற்போதைய அரசினாலும் பலகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அனால் அவை என்ன சிபார்சினைச் செய்திருந்தன என்பது பற்றி நாம் அறியவில்லை.

இதேவேளை உயர்நீதிமன்றில் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாகக் பாதிக்கப்பட்டவர்கள் வழக்குகளைத் தாக்கல் செய்கின்றனர். ஆனாலும் இதுவரை சொல்லிக் கொள்ளத்தக்க அளவில் அதனால் பலாபலன் 14 வருடங்களுக்கு மேலாக அவர்களது அகதி வாழ்வு தொடர்கின்றது.

இதனிடையே இவ் உயர் பாதுகாப்பு வலயத்தினால் பாதிக்கப்பட்ட மக்களது உரிமைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முழுமையாக திருப்தியளிப்பதாக இல்லை என மேலும் அவ் அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று யாழ்.செயலகத்தினில் இடம்பெற்ற கருத்துரையாடல் ஒன்றினை கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரபல மனித உரிமைகள் வாதியான மரியோ ஹோமஸ் இனால் எழுதப்பட்ட உயர் பாதுகாப்பு வலயப்பிரச்சினைக்கான தீர்வுகள் எனும் அறிக்கை தொடர்பான கருத்துரையாடலிலன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டினில் நேற்று இடம்பெற்றி ருந்தது.

செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கருத்துரையாடல் நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.றுவன் சந்திரசேகர இடம்பெயர்ந்தோர்க்கான மனித உரிமைகள் திட்ட இணைப்பாளர் செல்வி ம.வேழினி மனித உரிமைகளுக்கான சட்ட ஆலோசகர் திருமதி வாசுகி யாழ். செயலகத் திட்டப்பணிப்பாளர் பு.சுந் தரம்பிள்ளை மற்றும் செயலக அதிகாரிகள் பங்கெடுத்திருந்தனர்.

மறுபுறத்தே யாழ்.மாவட்ட இராணுவத்தலைமையகத்தைச் சேர்ந்த படை உயரதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், சு.பரமநாதன், கல்விப்பணிப்பாளர்கள் பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

உயர்பாதுகாப்பு வலயமும் அதற்கான தீர்வுகளும் எனும் அறிக்கைக்கான அறிமுகவுரையினை மரியோ ஹேமஸ் ஆற்றியிருந்தார்.

இதேவேளை பல தரப்பினரிடமும் இருந்தும் பெறப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான ஆலோசனை அறிக்கையினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழ தனது சிபார்சாக இலங்கை அரசிடம் இறுதியில் கையளிக்கவுள்ளதாக தெரிய வருகின்றது.

இக்கருத்துரையாடலில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் D.S.R.வானகுர பலாலி இராணுவத்தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் R.K.P றணவீரா ஆகியோர் படைத்தரப்பில் சமூகமளித்தவர்களாவர். (27)





நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்த கனேடியத் தூதுவர் வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் அதன் தலைவருடன் நடத்திய சந்திப்பையும் பின்னர் கன்னிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிடுவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

## புதுக்குடியிருப்பில் கடும்மழையினால் கட்டடங்கள், கிணறுகள் சேதம்

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடும் மழை காரணமாக பொதுமக்களுக்கும், வணிகர்களுக்கும், சில நிறுவனங்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

பி.ப 1.00 மணிக்கு ஆரம்ப மான மழை சுமார் 3.30 மணி வரையும் தொடர்ச்சியாக பெய்தது. இதனால் சில வணிக நிறுவனங்களுக்குள்ளே நீர் சென்று சேதமேற்பட்டுள்ளது.

மேலும் சில நிறுவனங்களின் சுவர் இடிந்து விழுந்துள்ளதுடன் நீரும் உட்புகுந்துள்ளது. அத்துடன் சில கிணறுகளும் இடிந்து வீழ்ந்துள்ளன. இதே வேளை புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை வீதி புதுக் குடியிருப்பு, முல்லை வீதி புதுக்குடியிருப்பு ஆகிய வீதிகளுக்கு மேலால் வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்ததால் போக்குவரத்து செய்வதில் மக்கள் பெரும் இடர்களை எதிர் கொண்டனர்.

மேலும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் நோயாளர்தங்கும் விடுதி வெளிநோயாளர் பிரிவு ஆகிய பகுதிகளில் கூரைகள் சீரின்மையால் நீர் உட்சென்று நோயாளர்களையும் அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கும் பெரும் சிரமங்களை உண்டு பண்ணியுள்ளது. மேலும் சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை முல்லைத்தீவு வலயக்கல்வி பணிமனை வெள்ளம் நின்று மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தி யிலே தமது வீடுகளுக்கு சென்றதையும் அவதானிக்க முடிந்தது. (08)

### -திருநெல்வேலி மணல் தரை ஒழுங்கையில-

## மயக்க மருந்தைப் பயன்படுத்திய பின் வெளிநாட்டுப் பணம், நகைகள் கொள்ளை

அதிகாலை நேரம் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் மயக்க மருந்தைப் பயன்படுத்தி பல லட்சம் ரூபா வெளிநாட்டுக் கரன்டிகளும் உட்பட நகைகள் மற்றும் கைத் தொலைபேசிகளையும் திருடிக் கொண்டு சென்றுள்ளனர்.

கந்தர்மடம் மணல்தறை வீதியில் உள்ள நா.நடராசா என்பவரின் வீட்டில் நேற்று முன்தினம் அதிகாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளரின் மகன் வெளிநாட்டில் இருந்து வந்து தங்கியுள்ளார். இவரின் பலலட்சம் ரூபா பெறுமதியான கரன்சிகளும், நகைகள் மற்றும் நான்கு கைத் தொலைபேசிகளும் களவாடிச் செல்லப்பட்டுள்ளது.

அதிகாலை நேரம் வீட்டில் ஆள் நடமாட்டம் காணப்பட்டதைத் தொடாந்து வீட்டில் இருந்த பெண் வெளி நாட்டில் இருந்து வந்தவரின் உடையை அணிந்து ஒருவர் நடமாடுவதையும் ஏனைய அறைகளிலும் ஆள்நடமாட்டம் இருப்பதை அவதானித்ததைத்தொடர்ந்து கூக்குரலிட்டார்.

அதனைத் தொடர்ந்து வீட்டின் கதவைத்திறந்து திருடர்கள் ஆட்கள் அற்ற பின்புறவளவு ஊடாக தப்பிச் சென்றுள்ளார்கள் இது தொடர்பாக யாழ்ப்பாணப பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் (04)

## நோர்வே தூதரகம் முன் நேற்று ஈ.பி.டி.பி.யினர் ஆர்ப்பாட்டம்

கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்பாக நேற்று ஈ.பி.டி.பி.யினரின் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள் ளது.

புத்தளத்தில் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட அந்த அமைப்பின் மூத்த உறுப்பினர் பவான் எனப்படும் தம்பித்துரை சிவகுமாரின் பிரேதப் பெட்டி சகிதம் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்குகளும் கலந்து கொண்டு கோஷமிட்டனர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் வழங்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே கொழும்பு, நோர்வே தூதரகத்துக்கு முன்பாக ஈ.பி.டி.பி.யினர் இப்படியாக இரு ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

### பேச்சுக்கள்...

மில்லை. போன்றவை தொடர்பாகவும் கனடா அரசாங்கம் மிகவும் கவலை அடைந்துள்ளது எனவும் விளங்கியுள்ளதாகவும் அவர் குறிபிட்டார். மேலும் இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கின் அபிவிருத்தி மற்றும் புனர் நிர்மானத்திற்கான தொழில் நுட்ப உதவிகளையும் அதிகாரப் பரவல் தொடர்பான நடவடிக்கைகளுக்கான உதவிகளையும் கனடா தொடர்ந்தும் வழங்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### தியாகி...

களின் தரிசிப்பு முடிவடைந்ததும் மீண்டும் சென்ற வழியால் ஒட்டுசுட்டான் வந்து கற்சிலைமடு ஊடாக மீண்டும் புதுக்குடியிருப்பு வந்து இரணைப்பாலை ஊடாக மாத்தளன் அம்பலவன் பொக்கணை வலையன்மடம் சென்று இரட்டை வாய்க்கால் வழியாக மீண்டும் புதுக்குடியிருப்பு வந்து இறுதிநாள் நிகழ்வில் கலந்து கொள்ளும்.(08)

### உரத்தின்...

விவசாய உற்பத்திக்கான 10000 விவசாயக் கழகங்களை அமைக்கும் தேசிய செயற்றிட்டத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்: அமெரிக்க டொலரின் விலை தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டு செல்லுமாயின் எரிபொருள் உட்பட சகல பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் எனத் தெரிவித்த அவர் உரத்தின் விலை தொடர்பாக தாங்கள் மதிப்பீடு செய்துள்ளதாகவும் சாதாரணமாக அவை 250 ரூபாவால் அதிகரிக்கக் கூடுமெனவும் டொலரின் மதிப்பு மற்றும் சர்வதேச சந்தையின் விலை அதிகரிப்பு என்பவற்றோடு ஒப்பிடுகையில் 250 ரூபாவால் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### சமாதானப்...

பேச்சுவார்த்தைகள் மீளத் தொடங்கப்பட வேண்டும் எனவும் தமிழ் மக்களின் அபிலாசைகளின் அடிப்படையில் அதற்குத் தீர்வு காணும் நோக்கோடு பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்என்பதில் எமது தலைமைப பீடம் மிகவும் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கின்றதென்பதை அவர்களுக்கு விளக்கி உள்ளோம் அவர்களும் எமக்கு உற்சாகம் ஊட்டும் அடிப்படையிலேயே பேசினார்கள். பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதைத்தான் சர்வதேச சமூகம் ஆவலோடு எதிர் பார்த்திருப்பதாகவும் விரைவில் பேச்சுக்கள் தொடங்கப்படவேண்டும் எனவும் ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதுவும் அவர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

*விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு கனேடிய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா? அல்லது நீங்கள் அவர்களிடம் இது பற்றி கேட்டுள்ளீர்களா?

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளுடைய இன்றைய நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும் கனடா அரசாங்கம் இன்று எதிர் பார்ப்புக்களுடன் இருப்பதாகவும் அவர்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்கள்.

*கனடாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் பிரகடனத்தைக் குழப்பும் நடவடிக்கையில் அரசாங்கம் சார்ந்த சக்திகள் ஈடுபட்டு வருகின்றன. இது பற்றி உங்கள் கருத்து யாது?

எங்களைப் பொறுத்தவரையில் அரச தரப்போ அல்லது தமிழ் மக்களின் அபிலாசைகள் எதிர்பாாப்புகளுக்கு எதிரானவர்களுடைய குழப்பகரமான செயற்பாடுகளுக்கு கனேடிய அரசாங்கம் பணிந்து போகுமென நான் நினைக்கவில்லை. ஏனெனில் கனடா நாடு கருத்துச் சுதந்திரம் கொண்ட மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கின்ற ஒரு உறுதியான சனநாயக அரசு என்ற வகையில் இவ்வாறான குழப்பகரமான நடவடிக்கைகள் அங்கு எடுபடுமென நான் கருதவில்லை.

*வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு கனேடிய அரசாங்கம் எவ்வகையான பங்களிப்பை வழங்கவுள்ளதென்பது பற்றிப் பேசப்பட்டதா?

கனடா அரசாங்கம் மட்டுமல்ல சர்வதேச சமூகமே தமிழர் தாயகப் பகுதியில் ஒரு தீர்வு எட்டப்படுகின்ற பொழுது ஒரு இயல்பு நிலை ஏற்படுத்தப்படுகின்ற பொழுது பெருமளவு உதவிகளை வழங்குவதற்கான அதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

நேற்றுக்காலை 11.45 மணியளவில் ஆரம்பமாகி சுமார் இரண்டு மணித்தியாலயம் வரை நடைபெற்ற இப்பேச்சுக் களில் கனேடியர் தூதுவர் வலறிறேம் அவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அவர்களும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பையடுத்து கனேடிய உயர்ஸ்தானிகர் கிளிநொச்சியில் உள்ள வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

செயலகத் தலைவர் வண-பிதா கருணாரட்ணம் அவர்களுடன் மனித உரிமைக்களுக்கெனதிரான வன்முறைகள் தொடர்பாகவும் அவற்றைத் தடுப்பதன் மூலம் உள்ளூர் மக்களை இத்தகைய மனித உரிமை மீறல்களில் இருந்து வெளிச்சத்துக்குக் கொண்டு வருவது தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

இதன் பின் அவர் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட்டார். (ச)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 21 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.